மன்னா

# புதிய மன்னார் ஆயருக்கு மகத்தான வரவேற்பு!

## மறைமவாட்ட ஆயராகப் புதிய ஆயர் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்!







மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராகத் திருந்தந்தையால் நியமிக்கப்பட்ட மேதகு பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி திருச்சபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மன்னார் மறைமாவட்டத்தின் பணிகளைப் பொறுப்பேற்றார். அன்றைய தினம் புதிய ஆயருக்கு மன்னார் நகரில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மன்னார் தள்ளாடிச் சந்தியில் இருந்து புதிய ஆயர் அவர்கள் மோட்டார் வாகனப் பவியாக அழைத்துவரப்பட்டார். மன்னார் பாலத்தடியில் நாதஸ்வர இசை முழங்க அவருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து புதிய ஆயர் அவர்களும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் கர்தினால் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை, திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மேதகு வன் ரொட் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோரும் அலங்கரிக்கப்பட்ட திறந்த வாகனத்தில் மன்னார் பாலத்தடியில் இருந்து புனித செபஸ்தியார் பேராலயம் நோக்கி பவனியாக அழைத்துவரப்பட்டனர். இவர்கள் வந்த திறந்த வாகனத்திற்கு முன்னே மஞ்சள் வெள்ளை நிறக் கொடிகளை அசைத்தவாறு பாடசாலை மாணவர்கள் மற்றும் பாண்ட் இசைக் குழுவினர், இன்னியக் குழுவினர் அணிவகுத்து வந்தனர். வீதியின் இருமருங்கிலும் மக்கள் நின்று கைகளை அசைத்துப் புதிய ஆயரை வரவேற்றனர். பேராலயத்தை அடைந்ததும் அங்கு காத்திருந்த இலங்கையின் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் மற்றும் பிரமுகர்கள் புதிய ஆயரை வரவேற்றனர். பின்னர் ஆயர் பணியைப் பொறுப்பேற்கும் நிகழ்வு ஆரம்பமாகியது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## வங்காலைப் பங்கில் மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு அஞ்சலி




அமரர் அருட்பணியாளர் மேரி பஸ்ரியன் அடிகளார் படுகொலை செய்யப்பட்டு இறந்த 33ஆம் ஆண்டு நினைவு கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி வங்காலையில் உணர்வுபூர்வமாக அனுசரிக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து அடிகளாரின் உருவச்சிலைக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

### ஜனவரி 18 - 25

### Christian Unity Week



**இவ்வாண்டுக்கான மையப்பொருள் :**

**"ஆண்டவரே, உமது வலக்கை வலிமையில் மாண்புற்றது"**

**(விடுதலைப் பயணம் 15: 6)**

கிறிஸ்தவ திருச்சபைகளுக்கிடையில் ஒற்றுமைக்காகச் செபிக்கும் வாரமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 18 - 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதி அமைந்துள்ளது. மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையும், பிரதான திருச்சபைகளும் அதிகமாகக் காணப்படும் முருங்கன் மற்றும் வவுனியா மறைக்கோட்டங்களில் இந்த ஆண்டும் கிறிஸ்தவ ஒன்றிப்புவார நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

கத்தோலிக்க திருச்சபையோடு பிரதான திருச்சபைகளான (Main Line Churches) மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை போன்ற திருச்சபைகள் இந்த ஒன்றிப்பு வார நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளன. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## பொங்கல் நல்வாழ்த்துக்கள்



ஜனவரி 14ஆம் திகதி தைப்பொங்கல் தினமாகும். மன்னா வாசகர்கள் அனைவருக்கும் தமிழர் திருநாளாம் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். உங்கள் உள்ளங்களும், இல்லங்களும் இறை அன்பினால் பொங்கி வழியட்டும். பொங்கலோ பொங்கல்! - மன்னா பதிப்பாசிரியர்

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?

**ஒரு வருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா – ரூபா 800/=**
**வெளிநாட்டுச் சந்தா – ரூபா3,500/=**
**சந்தாப் பணம் அனுப்பும் விபரம் 15ஆம் பக்கத்தில் உள்ளது.**

**எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் :**
077 - 7420811, 023 - 2250789

## திருப்பாலத்துவ சபை ஞாயிறு

### ஜனவரி 28ஆம் திகதி



பிள்ளைகள் தமது விசுவாசத்தை, பரிசுகளை, தமது வாழ்வை, தமது அன்பை ஏனைய பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ள நாம் அவர்களை வழிநடத்த வேண்டும். இவ்வாறு பிள்ளைகளின் மறைபரப்பு ஆர்வத்தை தூண்டவேண்டிய நாளாக இந்த நாள் அமைகின்றது. பங்கிலுள்ள திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களும், திருப்பாலத்துவ சபைப் பிள்ளைகளும் இந்நாளில் தமது மறைபரப்பு அர்ப்பணத்தை புதுப்பிக்கும்படி அவர்களை வழிநடத்துவோம்.

மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணியாளர் ஏ. யூட் குருஸ் அடிகளார் திருப்பாலத்துவ சபைப் பிள்ளைகளுக்கும் ஊக்குவிப்பாளர்களுக்கும் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.

**திருப்பாலத்துவ சபை ஞாயிறு மையப்பொருள் :**
**"காலத்தின் புனிதர்கள் நாமே"**
**"We are the Saints of the Times"**

## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் நிறைவு விழா

### ஜனவரி 27ஆம் திகதி

மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் (1981) நிறைவுவிழாத் திருப்பலி எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் நடைபெறும். அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு புதிய மன்னார் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தோட்டவெளி ஆலயத்தின் முன்னே உள்ள பிரதான வீதி நுழைவாயிலில் இருந்து பவனியாக வரவேற்று அழைத்துவரப்படுவார்.

மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளைச் சேர்ந்த இறைமக்களும் இந்த மறைமாவட்ட விழாத் திருப்பலியில் கலந்துகொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விளையாட்டு வினோதப் பொருட்களின் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

# வேட்பாளர் என்பவர் யார்?

## ஆசிரியர். எஸ்.ஏ.ஜெஸ்ரீன், நெடுங்கண்டல்.

“மக்கள் பணியே மகேசன் பணி”, “பொதுப்பணி இறைபணி”, “ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்” போன்ற மூதாதையரின் உண்மை வாக்கு யாவும் பொய்த்துப்போகும் வகையில் இன்று எமது தமிழ் மக்களின் தேர்தல் கலாசாரம் சோரம்போய்க் காணப்படுவது மிகவும் துரதிஸ்டமான விடயமாகும். தந்தை செல்வா, சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்களின் தகமையைப் பார்த்து வியந்த இவ்வுலகம், இன்று எமது அரசியல் நாடகத்தைப் பார்த்து செய்வது அறியாமல் திகைக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல் என்று தொடங்கி ஜனாதிபதித் தேர்தல்வரை இந்நாடகம் அரங்கேறிய வண்ணம் காணப்படுகின்றது.

ஓர் கட்சியைச் சார்ந்த வேட்பாளர் எவ்வாறான தகமையைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதை எம் மக்கள் மிகக்கரிசனையுடன் சீர்தூக்கி சிந்தித்துப் பார்க்கவேண்டிய தருணம் இது. ஒரு வேட்பாளருக்கு வெறுமனே பண பலமோ அல்லது ஆட்பலமோ மட்டும் இருந்தால் போதாது. மாறாக அவரிடம் தீர்க்கதரிசனத்துடன்கூடிய, இறைஞானம்மிக்க, சுயநலமற்ற, பொதுநலனைக் கருத்தில்கொண்ட சிந்தனை அவசியம். சமூக ஒற்றுமையைக் காக்கின்றவராக, தீர்க்கமான சமூகம் சார்ந்த முடிவுகளை எடுக்கக்கூடியவராக, எமது இனத்திற்கு நன்மையை ஏற்படுத்தக்கூடியவராக, பொதுநலச் சிந்தனையுடையவராக இருத்தல் மிக முக்கியமாகும்.

வேதாகமத்தின் ஒளியில் நோக்கும்போது யாவே இறைவனால், மக்களை வழிநடாத்துவதற்குப் பல அரசர்களை, இறைவாக்கினர்களை இறைவன்தாமே தேர்ந்துகொண்டார். ஆனால் இந்த இறைமனிதர்கள் தங்களுடைய பலவீனங்களால் தம் இயல்பை இழக்கின்றபொழுது கடவுள் அவர்களைக் கண்டிக்கின்றார். அத்தோடு அந்நிலையில் இருந்து அவர்களைத் துரத்திவிடுவதையும் எம்மால் காணமுடிகின்றது.

ஆனால் இன்று துரதிஸ்டவசமாக மீண்டும் மீண்டும் வரலாற்றுத் தவறுகளையும் பல ஊழல்களையும் செய்தவர்கள் இந்நிலைக்கு அழைக்கப்பட்டிருப்பது அல்லது அனுபவம் அற்ற அரசியல் ஞானம் அற்ற, வெறுமனே நானும் ஓர் வேட்பாளன் என்ற பெயருக்காக நியமிக்கப்படுவது எமது இனத்தையும் மக்களையும் எந்தளவு பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை எந்த ஓர் கட்சியும், குழுவும் நன்றாகச் சிந்திப்பதும் இல்லை, அறிந்திருப்பதும் இல்லை.

முப்பது வருடகால ஆயுதக் கலாசாரத்தின் முடிவில் இன்னும் எமது சமுதாயம் முழுமையான தீர்வை நோக்கிச் சற்றுக்கூட செல்லமுடியாமல் உள்ளது. நன்றாகத் திட்டமிட்ட முட்டுக்கட்டைகள் எம் இனத்திற்கு முன்பாகக் காணப்படுவதை யாவரும் அறிவோம். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் காணப்படும் பங்காளிக் கட்சிகளிடையே எத்தனையோ குழப்பங்கள், சாடல்கள், அரசியல் நாடகங்கள்! இவை மத்தியில் செய்வது அறியாத அப்பாவி மக்கள் குழப்பமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எமது அரசியல் தலைவர்கள் மத்தியில் ஆட்சிமோகம், கட்சிப் பகைமை, அரசியல் பழிவாங்கல்கள் போன்றவை அனுதினம் அரங்கேறுகின்றன.

இயேசுவுடன் இருந்து அவர் போதனையை அனுதினம் கேட்ட சீடர்கள் மத்தியிலும் யார் பெரியவர்? என்ற பிரச்சினை ஏற்பட்டது. ஆனால் அதற்கான தீர்வு எம் மீட்பரால் அருமையாக, யாரும் எதிர்பார்க்காத விடையாக அமைந்தது.

இந்நாட்டின் பிரஜைகளை வாழவைப்பதற்காக ஆட்சிப்பீடம் ஏறுகின்றவர்கள் வெறும் சுயநலத்துடன், தம்மவரும் தானும் நலமாக வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய மனநிலையில் உள்ளனர். குடும்ப அரசியல் இன்னும் எம்மத்தியில் எல்லாத்துறைகளிலும் காணப்படுகின்றது. ஆகவே பல வழிகளில் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்ட எம் இனத்திற்கு யார் விடுதலையைத் தேடிதருவது என்பது புரியாத புதிராகவே காணப்படுகின்றது. எமது தலைவர்களும் மக்களும் சில சந்தர்ப்பங்களில் உணர்ந்தும் உணராதவர்களாக புரிந்தும் புரியாதவர்களாக இருப்பது மிகக்கவலைக்குரிய விடயம்.

மக்களே! உங்களிடம் வாக்குக் கேட்டுவரும் ஒவ்வொருவரிடமும், “நீங்கள் இதுவரை எங்களுடைய மக்களுக்காக என்ன செய்தீர்கள்? உங்களால் எம் மக்கள் அடைந்த பயன்கள் என்ன? எமது இனத்திற்காக நீங்கள் செய்த தியாகம் என்ன?” போன்ற கேள்விகளைக் கேளுங்கள். “இன்று எமக்குப் பதவி வேண்டாம். ஆனால் அரசால் வழங்கப்படும் பல கோடிப் பெறுமதியான வாகனப்பத்திரச் சலுகைகள் வேண்டும்” என்று வாழுகின்றவர்கள் எம் நலம் கருதுவது என்பது கேள்விக்குறி. கூட்டாக எடுக்கும் முடிவு வேறு, தனித்தனியாக வாழும் முறை வேறு. இறுதியாகச் சொல்லும் வார்த்தை யாவும் எம் இனத்தின் விடிவுக்கே என்பதாகும்.

ஆகவே எமது சமுதாயம் இன்றும் உறங்கிக்கொண்டு இருப்பதைவிட்டு யதார்த்தமான முறையில் நாம் சிந்திக்க வேண்டும். பல ஆற்றல்களைக் கொண்ட எமது இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். அன்று பிடல் கஸ்ரோ ஏற்றிய புரட்சித் தீ இன்றும் எமது இளைஞர்களிடம் பற்றி எரிகின்றது என்பதை எண்பிக்கின்ற காலமாக எதிர்காலம் மாறவேண்டும். வெறுமனே தர்க்கம் செய்வது அல்ல, நீதியுடன்கூடிய உரிமையை எமது இளைஞர்கள் எதிர்பார்ப்புடன், தூரநோக்குடன் எமது அரசியல் தலைவர்களிடம் கேட்கக் கடமைப்பட்டுள்ளோம். எமது வாக்குகளைப்பெற்று வாகை சூடும் எத்தனை மனிதர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் எம் பிரதேசத்திற்கு வருகின்றார்கள், அவர்களால் எம் குறைகளைத் தீர்க்க முடியுமா? எனச் சிந்திக்க வேண்டும். பல துன்பங்களையும், துயரங்களையும், அனுபவங்களையும் கடந்த பல வருடங்களாகப் பெற்றுக்கொண்ட நாம் ஒரு நல்ல தலைவனைத் தேர்ந்தெடுக்கத் தவறுவது ஏன்?

நாம் ஒரு தனி இனம். எமது ஓய்வுபெற்ற ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் கூற்றைப்போல எமது தமிழ் மக்களுக்கு எனத் தனி அரசியல் கலாசாரம், சமூகப் பாரம்பரியம் போன்றவை இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் நன்றாக நினைவில் கொள்ளவேண்டும். ஓர் உன்னதமான சிறந்த அரசியல்வாதி அற்ப சொற்ப விடயங்களைக் கருத்தில் கொள்ளமாட்டான். ஆகவே மக்கள் இவ்வாறானவர்களை இனம்காண வேண்டும். கூட்டத்தோடு கூட்டமாக ஆமாசாமி, கும்பிடு சாமி என இருந்துவிட்டுப் போகமுடியாது. அல்லது எனது நண்பன் சொல்கின்றான் ஆகவே நானும் அதனை ஏற்றுக்கொள்கிறேன் எனவும் வாழக்கூடாது.

மக்கள் ஆணை இறை ஆணை என்பதை மறக்கக்கூடாது. அமெரிக்கா போன்ற மிகச்சக்திவாய்ந்த நாடுகளுடைய தேர்தல் முறைகளைப் பார்க்கின்றபோது எவ்வளவு நுணுக்கமாக அவர்கள் பல முக்கிய முடிவுகளை, இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்கிறார்கள் என்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் பல புத்திஜீவிகளையும், கல்வியாளர்களையும், வீரமானவர்களையும் கொண்ட எமது சமூகம் இவ்விடயத்தில் பாரிய பிழைகளை விடுகின்றது. சில வேளைகளில் எமது அரசியல் நகர்வுகள் யாவும் வேறோரு இனத்தினால் தீர்மானிக்கப்படுவதையும் நாம் காண்கின்றோம். அவர்களின் சுய இலாபங்களை கருத்தில் கொண்டதாக அவர்களுடைய இராஜதந்திர நகர்வுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாம் தடுமாறுகின்ற நிலைமையும் உள்ளது.

ஒரு சிறந்த ஆளுமையுடன்கூடிய தலைமை இன்னும் எம் இனத்தில் தேர்ந்து எடுக்கப்படவில்லையா? என்பது எம்மிடம் எழும்பும் விடைகாணமுடியாத வினாவாகவே உள்ளது.

எமது முன்னோரின் தியாகம் வீணாகப் போய்விடக்கூடாது. ஒரு நோக்கத்திற்காகப் பல தியாகங்கள், இழப்புக்களை எம் இனம் சந்தித்துள்ளது. ஆகவே நாம் பேசித்தீர்க்க வேண்டிய பல விடயங்கள் எம் முன்னால் காணப்படுகின்றன. இதனைச் செயற்படுத்த, முன்னெடுக்க எம் இனத்தில் இருந்து இதயசுத்தியுடன் அரசியல் ஞானம் மிக்க சிறந்த கல்வி, மொழியறிவுடன்கூடிய இறைஞானம் நிறைந்த மனிதப் பிரதிநிதிகள் எம்மால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பாமர மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வை ஊட்டும் கலாசாரம் சார்ந்த கருத்தரங்குகள், உரையாடல்கள், சமூகப் பொது அமைப்புக்களால் நடாத்தப்பட வேண்டும். இதனுடாக எமது மக்கள் யாவரும் விழிப்படைய வேண்டும். சமூகத்தில் காணும் அரசியல் மோகமும், சுயநலமும், சூழ்ச்சியும் கொண்ட அரசியல் தலைவர்கள் நீக்கப்பட வேண்டும், சுயசிந்தனையும் பொதுநலம் பேணும் பல தலைவர்கள் எதிர்காலத்தில் தோற்றம்பெற வேண்டும். நாம் யாசிப்பதும் அதுவே.

---

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### ஜனவரி

01. தூய கன்னி மரியா இறைவனின் தாய் - கடன் திருநாள்
06. மேதகு பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மன்னார் ஆயர் - குருப்பட்டம் (1973)
13. தூய வனத்துசின்னப்பர் ஆலயம் - கணேசபுரம் (வேப்பங்குளம்)
16. புனித ஜோசவ்வாஸ் திருவிழா - செட்டிகுளம், புதுக்காடு, மடுக்கரை, பூமலர்ந்தான், கள்ளிகுளம் (பெரிய முறிப்பு)
20. புனித செபஸ்தியார் திருவிழா - மன்னார் பேராலயம், முதலியார் கமம் (இலுப்பைக்கடவை), முத்தரிப்புத்துறை, கட்டைக்காடு, கண்டல்.
21. புனித செபஸ்தியார் - கொண்டாச்சிக்குடா, கொக்குப்புடையான், தவசிகுளம், தெற்கிலுப்பைக்குளம், மறவன்குளம்.
22. குழந்தைஇயேசு திருவிழா - காந்திநகர்.
24. மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் நிறைவு (1981)
25. புனித பவுல் - பூலார் குடியிருப்பு
27. மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் நிறைவு (1981) காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.
28. குழந்தைஇயேசு ஆலயம் - தாஸ்கோட்டம், பறண்நட்டகல் (ஓமந்தை)

- திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

---

### புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக

# அருட்திரு. திருமகன் நியமனம்



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்திரு. ஏ. பி. திருமகன் அடிகளாரை யாழ் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நியமித்துள்ளார்.

ஆயரின் இந்நியமன அறிவிப்பை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் கடந்த ஜனவரி 11ஆம் திகதி வியாழக்கிழமை கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் குழாம் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். புதிய அதிபர் அவர்களை யாழ் ஆயர் அவர்கள் எதிர்வரும் ஜனவரி 25ஆம் திகதி பணி நியமனம் செய்து வைப்பார்.

புதிய அதிபரின் பணி சிறக்க எம் வாழ்த்துக்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக இக்கல்லூரியின் அதிபராகவும், 30 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிசியார் கல்லூரியில் கல்விப்பணியும் ஆற்றிய அருட்திரு. ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு பத்திரியார் குடும்பத்துடன் இணைந்து வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

---

### கொழும்பு உயர் மறைமாவட்டத்தில்

# ‘நல்ல ஆயன்’ ஆண்டு



கொழும்பு உயர் மறைமாவட்டம் இவ்வாண்டை நல்ல ஆயன் ஆண்டாகக் கடைப்பிடிக்கின்றது. 2018 ஜனவரி 14ஆம் திகதி முதல் 2019 ஜனவரி 16ஆம் திகதி வரையான காலத்தை நல்ல ஆயன் ஆண்டாக கொழும்பு உயர் மறைமாவட்டம் பிரகடனப்படுத்தியுள்ளது.

---

# மன்னாவை

## உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

---

# தவறுக்கு வருந்துகிறோம்


2017 டிசம்பர் மாத மன்னா பத்திரிகையில் 3ஆம் gf f j j; p;“வேப்பங்குளம் பங்கில் உள்ள உக்கிளாங்குளம் திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் புதிய கட்டிடம் திறப்பு” என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியின் மூன்றாம் பந்தியில் இரண்டாம் வரியின் இறுதிப்பகுதியில், திருச்சிலுவைக் கன்னியர்களுடைய மாகாணத்தலைவியின் பெயர் “கிளேயா பஸ்தியாம்பிள்ளை” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவரது பெயர் “கிளேயா சுவானி” என்பதாகும்.

பொறுப்பான பதவியில் உள்ள அவரது பெயரில் ஏற்பட்டுள்ள தவறுக்காக வருந்துகிறோம். இத்தவறைச் சுட்டிக்காட்டிய அன்பர்களுக்கு நன்றி.

- மன்னா நிர்வாகம்

---

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

---

# ஆக்கங்களை

## எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- *மன்னா நிர்வாகம்* -

# முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே அனைவரும் முன்னுரிமை கொடுங்கள்!

## யாழ் ஆயர் யஸ்ரின் ஆண்டகை



தமிழ் மக்களின் பொது நலனில் அக்கறைகொண்டோர் யார்? தமிழ் மக்களின் நீதியோடுகூடிய நிரந்தரத்தீர்விற்காக உழைக்கக்கூடியோர் யார்? என்பதை இனங்காண வேண்டும். முகங்களுக்கல்ல, கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊரவர், உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாகத் திறமை உடையோரையும், இளையோர்களையும் தெரிவுசெய்ய வேண்டுமென வேண்டுகிறோம் என யாழ்ப்பாண ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

புத்தாண்டையொட்டி அவர் விடுத்த செய்தியில் மேலும் அவர் கூறியதாவது, அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், கொள்கைகள், சுயலாபங்கள், கட்சி நலன்கள், கருத்து வேறுபாடுகள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்தச் சுபீட்சமான எதிர்காலத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் அனைவர் பேராலும் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம் எனக்கூறியுள்ளார்.

# கிங்ஸ்லி ஆண்டகை விடைபெற்றுச் சென்றார்!

மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் கடந்த ஜனவரி 9ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து விடைபெற்று தனது சொந்த மறைமாவட்டமான திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இளைப்பாறியதை அடுத்து மன்னார் மறைமாவட்டத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிவர்த்திசெய்ய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை மன்னார் மறைமாவட்டத்தின் நிர்வாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுச் செய்யுமாறு ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையை நியமித்தார். கடந்த இரண்டு ஆண்டுகள் மன்னார் மறைமாவட்டத்தில் அரும்பணியாற்றிய அவர் புதிய ஆயரிடம் மன்னார் மறைமாவட்டத்தின் பணிப்பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு தனது சொந்த மறைமாவட்டமான திருகோணமலைக்குச் சென்றுள்ளார். மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சமூகம் சார்பாக ஆண்டகைக்கு எமது நன்றியையும், வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

கடந்த ஜனவரி மாதம் 09ஆம் திகதி மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. அ. விக்ரர் சோசை தலைமையிலான



சில மன்னார் மறைமாவட்டக் குருக்கள் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மன்னாரில் இருந்து திருகோணமலைக்கு அழைத்துச் சென்றனர். ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையை திருகோணமலை ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை, திருமலை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. றோபேட் கிங்ஸ்லி அடிகள், அருட்பணி. போல் றொபின்சன், அருட்பணி. டண்ஸ்ரன் ஆகியோர் வரவேற்றனர்.

# மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றியத்தின் ஒன்றுகூடல்








மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றியத்தின் ஒன்றுகூடல் கடந்த ஜனவரி 6ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மற்றும் பேரருட்கலாநிதி ஜோசவ் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றியத் தலைவர் சட்டத்தரணி திரு. புனிதநாயகம் அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் அனைத்தும் நடைபெற்றன. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் பணியாற்றும் கத்தோலிக்க அரச, அரச சார்பற்ற திணைக்களத் தலைவர்கள், அருட்பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து விடைபெற்றுச்சென்ற ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. இறுதியில் மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஒன்றியச் செயலர் திரு. கெனடி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

# குருக்களின் ஒன்றுகூடலில் ஆயர்களுக்கு மதிப்பளிப்பு









கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தையொட்டிய மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான ஒன்றுகூடல் கடந்த ஜனவரி மாதம் 3ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது மன்னார் மறைமாவட்டத்தின் வரலாற்றில் அண்மைக் காலங்களில் வரலாற்றுத் தடம்பதித்த மூன்று ஆயர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

மறைமாவட்டத்தில் பல ஆக்கபூர்வமான பணிகளை அர்ப்பணிப்போடு செய்த ஓய்வுநிலை ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களை வாழ்த்தியும், கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அப்போஸ்தலிக்க பரிபாலகராக அர்ப்பணிப்போடு மறைமாவட்டத்திற்குப் பணியாற்றி, தான் முன்னர் பணியாற்றிய மறைமாவட்டத்திற்குச் செல்லும் ஆயர் பேரருட்கலாநிதி ஜோசவ் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், மன்னார் மறைமாவட்டத்திற்கான மூன்றாவது ஆயராகப் புதிதாகப் பணிப்பொறுப்பேற்றுள்ள ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களை வரவேற்றும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அனைத்துக் குருக்களுக்கும் கிறிஸ்மஸ் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

## இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆகிய நான் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# மேய்ப்புப்பணித் திருமடல் - 2018

இயேசுக் கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,

**முன்னுரை**

இறைவனின் திருவுளப்படி மன்னார் மறைமாவட்ட இறைமக்களாகிய உங்களுக்குப் பணிசெய்ய, திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு, உங்கள் மத்தியில் நான் அனுப்பப்பட்டுள்ளேன். இந்த முதலாவது மேய்ப்புப்பணித் திருமடல் வழியாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசுக் கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!" (உரோமர் 1:1).

உங்களில் ஒருவராக இருக்கவும், உங்களோடு சேர்ந்து பயணிக்கவும், உங்களுக்குப் பணிசெய்யவும் இறைவனின் துணையோடு என்னை முற்றும் அர்ப்பணிக்கின்றேன். அன்பும், பண்பும், விருந்தோம்பலும், விசுவாச ஆழமும் நிறைந்த இறைமக்களைக் கொண்ட இந்த அழகான மன்னார் மறைமாவட்டத்தில் பணிசெய்ய இறைவன் எனக்கு வழங்கிய இந்த வாய்ப்புக்காக நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன். பல்வேறு வழிகளில் வளர்ச்சிகண்டுவரும் இந்த மறைமாவட்டத்தின் ஆயராகிய என்முன்னால் உள்ள பாரிய பொறுப்பையும், சவால்களையும் நான் நன்கு அறிவேன். எனக்கு முன்னர் இந்த மறைமாவட்டத்தின் ஆயர்களாக இருந்து அரும்பணியாற்றிய மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆகியோரின் வழியில் தொடர்ந்து இந்த மறைமாவட்டத்தைக் கட்டியெழுப்ப இறைவனின் அருட்துணையோடு என்னை நான் அர்ப்பணிக்கின்றேன்.

**நன்றி நவில்கின்றேன்**

கடந்த டிசம்பர் 30ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் பணிப்பொறுப்பை ஏற்க நான் வந்தபோது, மறைமாவட்ட இறைமக்களாகிய நீங்கள் எனக்கு வழங்கிய சிறப்பான வரவேற்புக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். நான் எதிர்பார்க்காத வகையில் மிகவும் பிரமாண்டமான முறையில் இந்த வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உங்கள் அனைவருடைய அன்பினதும், விருந்தோம்பல் பண்பினதும் அடையாளமாக அந்த நிகழ்வு அமைந்திருந்தது. அதேபோன்று ஆயர் பணிப்பொறுப்பை ஏற்கும் நிகழ்வும் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தையும் சிறப்பாக செய்துமுடிக்கக் காரணமாக இருந்த அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

**திட்டங்களைச் செயற்படுத்துங்கள்**

சென்ற ஆண்டு கடைப்பிடிக்கப்பட்ட தூய யோசவ்வாஸ் ஆண்டை இந்தப் புதிய வருடத்திலும் தொடர்வதாகவும், தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பணிவாழ்வில் அவர் முக்கியத்துவப்படுத்திய பொதுநிலையினரை மையப்படுத்திய செயற்திட்டங்களை இந்த வருடத்தில் முன்னெடுப்பதாகவும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மையப்பொருளை அடிப்படையாக வைத்து சென்ற ஆண்டின் இறுதியில் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு நடாத்தப்பட்டது. பொதுநிலையினரை மையப்படுத்தியதாக பொதுநிலையினரின் அழைப்பு, பணி, உருவாக்கம் போன்ற அம்சங்களைக்கொண்ட அந்த மாநாட்டுத் தீர்மானங்கள் ஏற்கனவே பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. உங்கள் பங்கிலும் பங்கு ரீதியிலான ஒரு ஒன்றுகூடலை நடாத்தி பொதுநிலையினர் ஆண்டுக்கான நடைமுறைச் சாத்தியமான பங்குத் திட்டங்களை வகுக்குமாறும் அவற்றை இயன்றவரை பிரமாணிக்கமாக நடைமுறைப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்**

முப்பத்தேழு ஆண்டுகள் நிறைவைக் காணும் மன்னார் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக நியமிக்கப்பட்டுள்ள நான் இந்த மறைமாவட்டத்தின் பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்க உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றேன். மன்னார் மறைமாவட்டத்தின் பெரும்பாலான இடங்கள் எனக்குப் புதியவையாகவும், மக்கள் எனக்குப் புதியவர்களாகவும் இருக்கும் நிலையில் நான் அனைவரோடும் விரைவில் அறிமுகமாக முயற்சி செய்வேன். பல்வேறு ஆக்கபூர்வமான புதிய செயற்திட்டங்களை இறைவனின் அருட்துணையோடும் உங்களின் ஒத்துழைப்போடும் மேற்கொள்ள இருக்கின்றேன். எனது முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது செபத்தையும், ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

கடந்த இரண்டு வருடங்களாக மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராகச் சிறப்பாகப் பணியாற்றிய ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் தனது பணியை நிறைவுசெய்துகொண்டு தனது சொந்த மறைமாவட்டமாகிய திருகோணமலைக்குச் சென்றுள்ளார். அவருக்கு நாம் நன்றி கூறுவதோடு அவருடைய உடல், உள, ஆன்மீக நலன்களுக்காகத் தொடர்ந்து செபிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை நாட்டின் திருத்தூதரான தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரை நமக்குக் கிடைப்பதாக! நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.

**இப்படிக்கு, கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,**
ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ
மன்னார் மறைமாவட்ட ஆயர்.

# விவிலியம் ஒரு நூலகம்

# ‘அஞ்சல்வழி விவிலியக் கல்வி’ கற்க உங்களுக்கோர் அழைப்பு!

அருட்திரு. அந்தோனி பெனாண்டோ (கிளேரியன் சபை) இயக்குனர், விவிலிய அப்போஸ்தலத்துவம்

*விவிலியத்தை முழுமையாகக் கற்கும் இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்*



எங்களில் பெரும்பாலானவருக்கு இருக்கும் பழக்கம் காலையில் எழுந்தவுடன் பத்திரிகை வாசிப்பது. ஒரு ஆராட்சியில் சொல்லப்படுகின்ற ஒரு விடயம் இந்தப் பத்திரிகைச் செய்திகளில் நூற்றுக்கு 80 சதவீதமான விடயங்கள் வன்முறைச் சம்பவங்கள் அல்லது மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்காத விடயங்கள். எங்கள் உள்ளத்தில் எதிர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிக்கின்ற விடயங்களாக இவை இருக்கின்றன. சரி, நாங்கள் நாளாந்தம் மனிதர்களோடு உரையாடுகின்றோம். அவை எமக்கு எதைத் தருகின்றது? எம்மில் எத்தனை பேர் உண்மையில் நல்ல விடயங்களையும், மற்றவர்களுக்குப் பலன் கொடுக்கும் விடயங்களையும்பற்றிக் கதைக்கின்றோம்? அதிலும் கிட்டத்தட்ட 80 வீதமான விடயங்கள் எதிர்மறையான எண்ணங்கள்.

இரவில் படுக்கைக்குமுன் நிறையப்பேர் தொலைக்காட்சியில் செய்தி பார்ப்பதுண்டு. அதில் உள்ள விடயங்கள் 80 வீதமானவை எதிர்மறையான விடயங்கள். ஆங்கிலத்தில் இதை *‘நெகற்றிவ் தோற்ஸ்’* (Negative thoughts) என்பர். ஆக காலை எழுந்ததுமுதல் படுக்கைக்குச் செல்லும்வரை மறைமுகமாக எங்களை வழிநடத்துவது எதிர்மறை எண்ணங்கள். இந்த எண்ணங்கள் எங்களோடு நின்றுவிடுவதில்லை. இது மற்றவர்களையும் பாதிக்கும். விஷேடவிதமாகப் பெற்றோர்கள் இப்படிப்பட்ட எண்ணங்களில் வாழும்போது குழந்தைகளை அது பாதிக்கும். ஆசிரியர்கள் இப்படிப்பட்ட எண்ணங்களில் இருக்கும்போது அது மாணவர்களைப் பாதிக்கும். அலுவலகத்தில் இப்படிப்பட்ட எண்ணங்களில் நீங்கள் சேவைசெய்தால் அது சேவையைப் பெற வருகின்றவர்களைப் பாதிக்கும்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் எங்கள் வாழ்க்கையை பாதிக்கின்றது. எண்ணம்போல் வாழ்வு என்பர். நாங்கள் சுயமாக நினைக்கின்றோமோ இல்லையோ ஆனால் எங்கள் உள்மனம் ஏற்றுக்கொள்ளும் விடயம் என்ன? “உலகத்தில் அமைதியில்லை, சமாதானம் இல்லை, எங்கும் வன்முறை! எதிலும் வன்முறை! இந்த உலகம் சரியில்லை, இதில் வாழும் என்னில் அமைதியில்லை, நானும் சரியானவன் இல்லை, நான் நல்லவனாக வாழமுடியாது” போன்ற மறைமுகமான எண்ணங்களை உள்வாங்கி வாழப் பழகும்போது அது ஒருவருடைய வளர்ச்சிக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இதனால் அவனுள் பொறாமைகள் எழுகின்றன. மற்றவனைவிட தான் தாழ்ந்தவன் என்ற எண்ணம் உருவாகி மற்றவரிலும் உயர்ந்தவனாக தன்னை சித்தரிக்கும் போராட்டம் அவனில் உருவாகின்றது. இது ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியாது.

ஆக இந்த மறைமுகமான எண்ணங்கள் அகல வேண்டும். இதற்கு மாற்றீடாக என்ன செய்ய முடியும்? செய்தித்தாள்களை வாசிப்பதையோ? தொலைக்காட்சி பார்ப்பதையோ நிறுத்த முடியாது. அது எம் வாழ்க்கைக்கு அவசியம். ஆனால் இந்த எண்ணங்களைச் சீர்படுத்தும் பொறிமுறைகளை கையாள வேண்டும். அப்படி எண்ணங்களைச் சீர்செய்கின்ற ஓர் அற்புதமான ஆயுதத்தை எங்களைப் படைத்த ஆண்டவர் எங்கள் கைகளிலே கொடுத்தார். அதுதான் திருவிவிலியம்.

## திருவிவிலியத்தை ஏன் வாசிக்க வேண்டும்?

விவிலியத்தை வாசிக்கும்போது அதை ஏன் வாசிக்க வேண்டும்? என்று விவிலியத்திலே பல இடங்களில் சொல்லப்பட்டிருப்பதை பார்க்கின்றோம்.
உதாரணமாக: 1 கொரிந்தியர் 10:11-12 பகுதிகளில் பவுல் இவ்வாறு எழுதுகின்றார்!

**“அவர்களுக்கு நிகழ்ந்த இவையனைத்தும் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமைகின்றன. இறுதிக்காலத்தில் வாழும் நமக்கு இவை அறிவுரையாக எழுதப்பட்டுள்ளன. எனவே தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக்கொண்டிருப்பவர் விழுந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளட்டும்”**

ஆண்டவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களுடைய வாழ்வில் ஆண்டவர் பலவிதமான நன்மைத்தனங்களை புரிந்தார். இப்படித்தான் வாழ வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தார். ஆனால் அந்த மக்கள் ஆண்டவரின் அருளை இழந்து இருளில் மூழ்கினர்.

அப்படி இவர்கள் இருளில் மூழ்கி அருளை இழந்த இந்த விடயங்கள் தெரியாதிருந்தால் மற்றவர்களும் இதே ஒரு கதிக்கு ஆளாகுவார்கள். ஆகவே அவர்களுக்கு நிகழ்ந்த அனைத்தும் எச்சரிக்கையாக அமைய வேண்டும். அதனால் இதை மற்றவர்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். தெரிந்துகொள்ளும் ஒரேவழி எழுதிவைக்கவேண்டும். அதனால்தான் இவை அனைத்தையும் இந்த நூல் கொண்டுள்ளது. இது எச்சரிக்கையாக உள்ளது.

அது மாத்திரம் இன்றி இரண்டாம் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் எமக்கு இவை அறிவுரையாகவும் எழுதப்பட்டுள்ளன என இப்பகுதி எடுத்துக்காட்டுகின்றது. விவிலிய வார்த்தைகள் ஆண்டவருடைய கட்டளைகள். நாமும் எமது பிள்ளைகளும் வாழ வழிகாட்டும் விடயம் என்பதை இணைச்சட்டம் 6:7ஆம் வசனம் எங்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**“இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். அவற்றை நீ உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும்போதும், உன் வழிப்பயணத்தின்போதும் நீ படுக்கும்போதும் எழும்போதும் அவற்றைப்பற்றிப் பேசு. உன் கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொள். உன். கண்களுக்கிடையே உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழை வாயில்களிலும் அவற்றை எழுது”**

## உண்மையில் விவிலியம் என்பது என்ன?

அது எங்களுக்கு எதைச் சொல்ல விளைகிறது? சாதாரண மனித மொழியில் சொல்வதானால் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் ஏதாவது பொருள் வாங்கும்பொழுது அதனுடன் சேர்த்து ஒரு புத்தகம் கொடுக்கப்படும். ஆங்கிலத்தில் அதை Manuel Book, Catalog என்று அழைப்பர். இது வாங்கிய பொருளை எப்படி பாவிக்க வேண்டும் என்று எங்களுக்கு கற்பிக்கின்றது. ஒரு மின் உபகரணத்தை வாங்கும்பொழுது அதை எப்படிப் பாவிப்பது என்று அந்தப் பாவிப்பின் கை நூலை கவனமாக வாசிப்போம். காரணம் தவறாகப் பாவிக்கப்பட்டு அந்த பொருள் பழுதடையக் கூடாதென்ற எண்ணம். இப்படி அந்தப் பாவனைக் கையேட்டில் குறிப்பிடப்படாத விடயங்களை, செய்யக்கூடாது என்று சொல்லப்பட்ட விடயங்களை வாங்கிய பொருள் என்னுடையது என்று எண்ணிச் செய்யத் தொடங்கினால் அந்தப் பொருள் இலகுவில் பழுதடையும்.

உதாரணமாக ஒரு உந்துருளியை (Motor Cycle) எடுத்துக்கொள்வோம். அதை இயக்கப் பெற்றோல் இட வேண்டும். என்று பாவனைக் கையேட்டில் உள்ளது. ஆனால் நான், “என் பணத்தைக்கொண்டு வாங்கினேன். அதற்குத் தேங்காய் எண்ணைதான் இட்டு ஓடுவேன்” என்று இயக்க முற்பட்டால் என்ன நடக்கும்? முடிவு நீங்கள் அறிந்ததே. ஒரு மின் அழுத்தி (Iron Box) பயன்பாட்டை நீங்கள் பாவனைக் கையெட்டில் பார்க்கின்றீர்கள். அதை எப்படிப் பாவிக்க வேண்டும் என்ற கோட்பாட்டைமீறி, தண்ணீர் உள் வைத்துத்தான் நான் உடைகளை அழுத்துவேன் என்றால் என்ன நடக்கும்? நீங்கள் அறிந்ததே. இந்தப் பொருட்களை நாங்கள் எவ்வளவு காலம் பாவிக்க முடியும், ஒரு வருடம், இரண்டு வருடம், ஐந்து வருடம், எங்களுக்கே தெரியும் அது பழுதடைந்து விடும். அதை வீசவேண்டியதுதான் என்று. இப்படிச் சிறிது காலம் பாவிக்கின்ற பொருளுக்கே இவ்வாறு கவனம் செலுத்துகின்றோம் என்றால் எங்கள் உடலைக் குறித்து எவ்வளவு அக்கறையாக நாம் செயற்பட வேண்டும். தகுந்த முறையில் எங்கள் உடலை கையாளும்பொழுதுதான் அதை நீண்ட காலம் வாழ வைக்க முடியும். ஆன்மாவைக் காத்துக் கொள்ள முடியும்.

எங்கள் மனதிற்குள் எதைப் போடவேண்டும் எதைப் போடக்கூடாது என்று அறிந்திருந்தால் அது தூய்மையாக இருக்கும். மனது தூய்மையானால் உடல் ஆன்மா இரண்டுமே தூய்மையாக மாறும். ஆனால் எங்களை நடத்த எங்களுக்குத் தெரிவதில்லை. எம்மில் பலர், “எனக்குத் தெரியும்” என்ற எண்ணத்திலே தீமையில் செல்கின்றனர். எங்களை எப்படி நடாத்துவது என்றும் எமது உடலை ஆன்மாவை எப்படிக் காப்பாற்றிக்கொள்வதென்றும் எம்மைப் படைத்த தேவன் எங்களுக்குப் பல நூற்றாண்டு முன்னமே எங்கள் கையில் கொடுத்த பயன்பாட்டு கைநூல்தான் விவிலியம். ஆனால் அழிந்துபோகும் பொருட்களை பயன்படுத்த மீண்டும் மீண்டும் அதன் பயன்பாட்டு கைநூலை வாசிக்கும் நாம், எத்தனை முறை அழியாத ஆன்மாவைப் பாதுகாக்கும் கைநூலான விவிலியத்தை வாசித்திருக்கின்றோம்? வாசிக்கின்றோம்?

## விவிலியத்தில் என்ன இல்லை

ஒரு மனிதனுடைய பிறப்பிலிருந்து இறப்புவரை தேவையான எல்லா விடயங்களையும் கொண்ட பொக்கிஷம் திருவிவிலியம். இந்நூல் எல்லா விடயங்களையும் உள்ளடக்கியது. முதலாவதாக, அது எம்மிடம் உள்ள தவறான கருத்தை அகற்றுகின்றது. அதனை இயேசு இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றார், “உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. எனவேதான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்” (மத் 22:29). ஒரு மனிதனுக்கு மறைநூல் தெரிந்திருந்தால் அவன் கடவுளின் வல்லமை என்ன என்று தெரிந்திருப்பான். கடவுளின் வல்லமை இன்னதென்று தெரிந்த மனிதன் தவறான கருத்தைக் கொண்டிருக்கமாட்டான்.

தன்னைப் பற்றிய தவறான கருத்து, மற்றவர்களைப் பற்றிய தவறான கருத்து, விசுவாச சத்தியங்களைப் பற்றிய தவறான கருத்து, விசுவாச சத்தியங்களைப் போதிக்கும் திருச்சபையைக் குறித்து தவறான கருத்து இவை அனைத்தும் அகற்றப்பட தேவையான ஒன்று உண்மையை அறிந்திருப்பது.

உண்மையை உள்ளத்தில் பதித்து தவறான கருத்தை அகற்றுவது மறைநூல். ஆகவே விவிலியம் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைப் பாதைக்கு வெளிச்சமாக இருக்கின்றது (திருப்பாடல் 119/105). விவிலியம் வாழ்க்கையை உறுதிப்படுத்திக்கொள்ளும் அறிவைக் கொடுக்கின்றது. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கும்போது வாழ்க்கை உறுதியான அஸ்திவாரத்தில் கட்டப்பட்டதாக அமைய வழிவகுக்கின்றது (மத் 7:24).

அவர் எமக்குத்தந்த மறைநூலை ஆழமாக்குகின்றபோது அது வாலிப வாழ்க்கையை சுத்தப்படுத்துகின்றது. நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்ளக் கற்பிக்கின்றது (தி.பா.119/09). இப்படி இறைவார்த்தை மனிதனை முழுமைபெறச் செய்கின்றது.

மறையாசிரியர், பெரியவர், இளம் வாலிப் பிள்ளைகளாகிய நாம் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பங்குகொள்ளும் பாரிய அழைப்பைப் பெறுகின்றோம். “உன் வழியாக மண்ணுலகம் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும்” (தொ.நூ. 2:3) என்ற ஆபிரகாமின் அழைப்பு எம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட அழைப்பு. எம்முடைய வாழ்க்கை, நடத்தைகள் மற்றவர்களை ஆண்டவர்பால் கொண்டுவர வேண்டும். இப்படிக் கொண்டுவர நாங்கள் ஆண்டவருடைய வார்த்தையை ஆழமாகக் கண்டறிந்து நிற்க வேண்டும்.

இறைவார்த்தை மறைபொருளைக் கொண்டுள்ளது. மறை ஆசிரியர் நாம் இப்பொருளை அறிந்து எமது எதிர்கால சந்ததியினருக்கு கற்பிப்பது எமது தலையாய கடமை. கடமையை செய்ய நாம் கற்றறிந்திருப்பது முக்கியம்.

உலகம் சொல்லித்தரும் தத்துவங்களுக்கும் விதிமுறைகளுக்கும் அப்பால் சென்று, ஆண்டவரின் எண்ணத்தைச் சொல்லிக்கொடுக்கும் ஒரு பாரிய பணி எமக்குண்டு. சமுதாயத்தில் பல்வேறுபட்ட நன்மை தீமைகளைச் சொல்லிக்கொடுத்து கற்பிக்கத் தூண்டும் பயிற்சிக் கலாசாலை விவிலியமாகும்.

விவிலியத்தின் பல்வேறுபட்ட பகுதிகள் பிறப்புமுதல் இறப்பு வரை வாழவேண்டிய, கையாளவேண்டிய விடயங்களைச் சொல்லித்தருகின்றது. ஒரு திருமணத்திற்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிப்பட்ட கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? (1 திமொத்தேயு, எபேசியர் 5:23-33, தொ.நூ.2:20-20). ஒரு மனைவியின் நடத்தை எவ்வாறு அமைய வேண்டும்? நீதி மொழி 12:4, சங்கீதம் 128:3, நீதிமொழி 19:14 போன்ற பகுதிகளில் வேதம் சொல்லித் தருகின்றது. ஒரு குழந்தை தாமதமாகும்போது என்ன செய்ய வேண்டும் (தொ.நூல்.25:21), கணவன் மனைவி பிரச்சினையின்போது (2:13-14), (தோபித்த 6:18) என்ன செய்யவேண்டும் என இப்படிப் பிறப்புமுதல் இறப்புவரை மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கொண்டு வழிநடத்துவது இறைவார்த்தை.

விவிலியத்தில் இடம்பெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள், கவலை கண்ணீரோடு வருபவர்களுக்கும் ஆறுதல் கூறமுடியும். பிரச்சினைக்கு ஆறுதல் கூறக்கூடிய விடயங்களை அறிந்திருக்க வேண்டும். இதற்கு விவிலியத்தை நாம் வாசிக்க வேண்டும். இதுவரை எம்மில் எத்தனைபேர் விவிலியத்தை முழுமையாக வாசித்திருக்கின்றோம்? எம்மில் நிறையப்பேருக்கு இந்தக் கேள்விக்குப் பதில் ‘இல்லை’ என்பதாகும். இந்தக்குறையை நிவர்த்திசெய்ய இலங்கை கிளரேசியன் சபையினர் மேற்கொண்டு வரும் இன்னும் ஒரு பணி “அஞ்சல்வழி விவிலியக் கல்வி”. இந்த அஞ்சல்வழி விவிலியக் கல்வியை முடிக்கும்போது நீங்கள் முழு விவிலியத்தையும் அறிந்துகொண்டவர்களாக மாறுவீர்கள். இது இரண்டு வருடப் பாடநெறியாகும். ஆனால் உங்கள் ஆர்வத்தையும் ஆற்றலையும் பொறுத்து இந்தப் பாடநெறியை நீங்கள் இரண்டு வருடத்திற்கு முன்பே முடிக்கலாம். இந்த இரண்டு வருட பாடநெறியின் முடிவில் மிகப் பெறுமதியான டிப்ளோமா சான்றிதல் வழங்கப்படும். அத்தோடு பரிசில்களும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். இந்தப் பாடநெறி 21 விவிலிய புத்தகங்களை உள்ளடக்கியது. நீங்கள் இந்தப் பாட நெறிக்குள் இணைத்துக்கொள்ளப்பட்ட உடனே உங்களுக்கு முதல் புத்தகம் அனுப்பிவைக்கப்படும். அதற்குப் பதில் அனுப்பியபிறகு நீங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளுடன் இரண்டாவது புத்தகம் அனுப்பப்படும். இது தொடர்ச்சியாக நடைபெறும். பாடநெறி இடையில் உங்கள் பிரதேசங்களில் நாங்கள் நடாத்தும் விவிலியக் கருத்தரங்கிலும் நீங்கள் பங்குகொள்ளலாம். இதற்கான அறிவித்தல் உங்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்தக் கல்விநெறியானது இலவசமாக நடத்தப்படுகின்றது. தபால் கட்டணமாக ரூபா700/= அறவிடப்படுகின்றது. இதை நீங்கள் இரண்டு தவணையாகச் செலுத்தலாம். இந்தப் பாடநெறி முடிவில் விவிலியத்தைப்பற்றி ஒரு சிறந்த அறிவைப் பெறுவது மாத்திரம் அன்றி முழு விவிலியத்தையும் வாசித்து முடித்தவர்களாக நீங்கள் மாறுவீர்கள்.

இவ்வாறான பயன்மிக்க கல்வியை நீங்கள் தொடர விரும்பினால்,

**நீங்கள் செய்ய வேண்டியது உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி என்பவற்றை தெளிவாகக் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும். மேலதிக தகவல்கள் உங்கள் முகவரியை வந்தடையும்.**

தொலைபேசி இலக்கங்கள்: 0767 91 5554 / 0711 91 5554
அல்லது **மேலதிக விபரங்களுக்கு:**
இயக்குனர், அஞ்சல்வழி விவிலியக் கல்வி, “கிளாரட் அகம்”
இல. 15, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

## மறைமாவட்ட மூத்தோர் சங்கங்களின் சமாசம் நடாத்திய
# கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா



மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசம் நடாத்திய கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா நிகழ்வு கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதி மன்னார் குடும்பப்பணி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட மூத்தோர் சங்கங்களின் இயக்குனர் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் (அ.ம.தி) அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்தொகையான மறைமாவட்ட முதியோர் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு இளைமைமிகு எண்ணங்களோடும், ஆற்றல்களோடும் சிறப்பான கலை பண்பாட்டு நிகழ்வுகளை வெளிக்கொணர்ந்தனர்.

இச்சங்கம் 2000ம் ஆண்டளவில் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் இயக்குனராக தற்போதைய குருமுதல்வர் அ. விக்ரர் சோசை அடிகளார் பணியாற்றினார். ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. எ. மிராண்டா வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு மன்னார் மறைமாவட்டத் திருத்தூதுப்பணி நிர்வாகி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராக வருகைதந்து சிறப்பித்தார். அத்தோடு சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலர் திரு. அ. பரமதாஸ் அவர்களும் மன்னார் வைத்தியசாலை ஆன்மீகப் பணிக்குப் பொறுப்பான அருட்பணி. ஜெரோம் லெம்பேட் (அ.ம.தி) அடிகளாரும், மூத்தோர் சங்கங்களின் உரிமைகள் மேம்பாட்டு மன்னார் மாவட்ட அரச பணியாளர் திரு. ஐ. செந்தில் குமரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இச்சங்கத்தின் வளர்ச்சி அறிக்கையை மன்னார் மறைமாவட்ட மூத்தோர் சங்கத்தின் செயலாளர் திரு. எம். ஆனந்தம் றோச் அவர்களும், வருடாந்த கணக்கறிக்கையை திரு. மேவின் குரூஸ் அவர்களும், நன்றியுரையை திரு. அந்தோனிமுத்து அவர்களும் வழங்கினார்கள். நிறைவாக வந்திருந்த மூத்தோர் அனைவருக்கும் பரிசுகளும், மதிய உணவும் வழங்கப்பட்டன.

## பங்குத் திட்டங்களை வகுப்பதற்காகப் பேராலயத்தில் ஒன்றுகூடல்



கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடந்து முடிந்த மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாட்டில் பங்குத் திட்டமாக வழங்கப்பட்ட பொதுநிலையினரின் அழைப்பும், பணியும், வாழ்வும் என்னும் கருப்பொருளை மையமாக வைத்து தங்கள் பங்குத் திட்டங்களை வகுப்பதற்காக மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த 10.12.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு மன்னார் தூய செபஸ்தியார் பேராலயப் பணிக்குழுக்கள் பேராலயத்தின் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடின.

பங்குத்தந்தை அருட்பணி. பெப்பி சோசை அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒளியேற்றுதல், இறைவழிபாடு ஆகியவற்றைத் தொடர்ந்து, பங்குத்தந்தையின் அறிமுக உரை இடம்பெற்றது. அதன் முடிவில் மேலே குறிப்பிட்டுக் காட்டப்பட்ட மையப் பொருளை ஆழ்ந்து சிந்தித்து திட்டங்களை வகுக்க உறுதுணை செய்யும் நோக்கோடு ஆற்றுப்படுத்தும் உள்ளீட்டு உரை அருட்திரு. அந்தோனிதாஸ் டலிமா அவர்களினால் வழங்கப்பட்டது. அதன் பின்னர் குழு ஆய்வு இடம்பெற்றது.

இக்கருத்தமர்வில் பேராலயத்தில் பணிபுரியும் அருட்பணியாளர்கள் மற்றும் துறவிகள், பணியாளர்கள் எனப் பெருந்தொகையானவர்கள் கலந்துகொண்டனர். குழு ஆய்வின்போது இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தினர். தொடர்ந்து மன்னார் பேராலய அருட்பணிப் பேரவைச் செயலர் திரு சதீஸ் அவர்களின் நன்றியுரையுடன் அனைத்தும் நிறைவுற்றன.

## மன்னார் மறைமாவட்ட
# கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஒளிவிழா

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவையொட்டிய ஒளிவிழா மற்றும் கலை பண்பாட்டு நிகழ்வுகள் கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி மாந்தையில் அமைந்துள்ள மருதமடுத் திருத்தாயாரின் ஆரம்ப இருப்பிடமான மாந்தை மாதா திருத்தல முன்றலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட திருத்தூதுப்பணி நிர்வாகி பேரருட்கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அவர்களும், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன் அவர்களும் கலந்துகொண்டனர். இவர்களோடு பல அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும், பல இறைமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாலை 6.00 மணிக்கு விருந்தினர்களை மாந்தை மாதா திருத்தல பிரதான நுழைவாயிலில் வைத்து தமிழ்ப்பண்பாட்டு கோலங்களோடு மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியப் பிரதிநிதிகள் மாலையிட்டு ஆராத்தி எடுத்து வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து வங்காலை தூய ஆனாள் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் வாத்திய இசையோடு விருந்தினர்கள் நிகழ்ச்சி மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து மறைமாவட்டப் பங்குகளின் கத்தோலிக்க இளைஞர்கள் மிகவும் சிறப்பான, விசுவாச வாழ்வை ஆழப்படுத்தக்கூடிய கலை பண்பாட்டு நிகழ்வுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின் வரவேற்புரையை இளைஞர் ஒன்றியத் தலைவர் செல்வன் டெஸ்மன் வழங்கினார். ஆசியுரையை மாந்தைப் பங்குத்தந்தை அருட்பணி. ச. மரியதாசன் (சீமான்) வழங்கினார். மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

சிறப்புரை வழங்கிய குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், "இளைஞர்களே, நீங்கள் வலிமை மிக்கவர்கள்" என்னும் தூய பவுலடியாரின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி, இளைஞர்கள் தன்னம்பிக்கையோடும், சமூகநல ஈடுபாட்டோடும் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். முதன்மை விருந்தினர் உரை வழங்கிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள், இளைஞர்கள் மூத்த பிரஜைகள் மட்டில் அக்கறை உடையவர்களாகவும் அவர்களை மதித்து நடக்கின்றவர்களாகவும் இருக்கவேண்டுமெனக் கூறினார்.

நன்றி உரையை இளைஞர் ஒன்றியத் துணைச் செயலர் செல்வி. சுமி வழங்கினார். அனைத்து நிகழ்வுகளையும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு இயக்குனர் அருட்பணி. சீ. ஜெயபாலன் அடிகளார் மிகவும் சிறப்பாக ஒருங்கிணைத்து செயற்படுத்தினார். மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு உறுப்பினர்கள் இவர்களுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டனர். (இந்நிகழ்வோடு தொடர்புடைய படங்களை 9ஆம் பக்கத்தில் காணலாம்)

# பள்ளிமுனை
## தூய லூசியா திருவிழா



பள்ளிமுனைப் பங்கின் பாதுகாவலியான தூய லூசியாவின் திருவிழா கடந்த டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னார் மறைமாவட்ட திருத்தூதுப்பணி நிர்வாகி பேரருட்கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியில் பல அருட்பணியாளர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

இவ்விழாவில் மன்னார் பிரதேச செயலர் திரு. மரியதாஸ் அவர்களும் இன்னும் பல அரச அரசசார்பற்ற திணைக்களத்தலைவர்களும் கலந்துகொண்டனர். இவ்விழாவில் பெருந்தொகையான இறைமக்கள் கலந்து செபித்தனர். திருப்பலி முடிவில் புனித லூசியா அன்னையின் திருச்சுரூப்பவனி இடம்பெற்றது. பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஸ்ரீபன்ராஜ் அடிகளார் பங்குமக்களின் ஒத்துழைப்போடு இத்திருவிழாவைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## சிறிய குருமடத்தில் ஒளிவிழா

மன்னார் மறைமாவட்டத்தில் வருங்காலக் குருக்களைத் தயார் செய்வதற்கான நாற்று மேடையாகத் திகழும் மன்னார் மடுமாதா சிறிய குருமட மாணவர்களின் கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டிய ஒளிவிழா கடந்த 09.12.2017 சனிக்கிழமை மாலை 06.00 மணிக்கு மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணி. அ. ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

விருந்தினர்களை வரவேற்றபின் மாலைத் திருப்பலியோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இத்திருப்பலியை மன்னார் மறைமாவட்ட கல்வி, மறைக்கல்வி மற்றும் விவிலியப் பணிக்குழுவின் இயக்குனர் அருட்பணி. பி. றெஜினோல்ட் அவர்கள் நிறைவேற்றி மாணவர்களின் வளர்ச்சிக்கான இறைவார்த்தைச் செய்தியை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து சிறிய குருமடத்தின் கேட்போர் கூடத்திலே கிறிஸ்து பிறப்பையொட்டிய கலை பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இங்கு மன்னார் தூய சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் (மணி) அவர்கள் மாணவர்களுக்கான கிறிஸ்து பிறப்பு ஒளிவிழாச் செய்தியை வழங்கினார். முன்னைநாள் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வரும் சிறிய குருமடத்தின் முன்னைநாள் அதிபருமான அருட்பணி. அ. சேவியர் குரூஸ் அடிகளாரும், பல அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும், முன்னைநாள் மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், நலன் விரும்பிகளும், உதவியாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்விற்குச் சமூகமளித்திருந்தனர்.

## அளவக்கைப் பங்கில்
# புதிய நற்கருணைப் பேழை

புதிதாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் அளவக்கை தூய கார்மேல் மாதா ஆலயத்தில் இயேசுவின் திருவுருவத்திற்குள் வடிவமைக்கப்பட்ட 10 அடி உயரமும் 5 அடி அகலமும் கொண்ட புதிய நற்கருணைப் பேழை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தப் புதிய பேழை சம்பிரதாயபூர்வமாக ஆசீர்வதித்து ஸ்தாபகம் செய்யப்பட்டது.



பொதுநிலையினர் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# பொதுநிலையினரும் பங்கேற்புத் திருச்சபையும்

திருச்சபை ஆட்சியாளர்களின் பார்வை அண்மைக் காலங்களில் பொதுநிலையினர் பக்கம் திரும்பியுள்ளதற்குக் காரணம் என்ன? குருக்கள், துறவியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருவது உலகு அறிந்த இரகசியம்! இதை ஈடுசெய்யும் பொருட்டே 'பங்கேற்புத் திருச்சபை' என்னும் கருத்தாக்கம் உருவாக்கப்பெற்று பரவலாக்கப்பெற்று வருகிறது. திருஆட்சியாளர்கள் மட்டுமே ஆற்றவேண்டியவை என்று ஒதுக்கிவைக்கப்பெற்ற சில பணிகள் இன்று பொதுநிலையினர் செய்யும்பொருட்டுப் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன எனச் சிலர் எண்ணக்கூடும்!

திருச்சபைக்குள் இருந்துகொண்டே தங்கள் உரிமைகளை முன்வைத்துத் திருச்சபைக்கு எதிராகப் போராடிவரும் பொதுநிலையினருடைய வாயை அடைப்பதற்கு இது ஒன்றே சரியான உத்தி எனும் தவறான சிந்தனையும் எழ இடம் உண்டு.

திருச்சபையில் பொதுநிலையினருக்கு என்று சில உரிமைகளும் கடமைகளும் உள்ளன. அவை திருஆட்சியாளர்கள் அவர்களுக்கு கொடுத்துள்ள சலுகைகள் அல்ல, மாறாகக் கடவுளே அவர்களுக்கு அளித்துள்ள அருட்கொடை! இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்போது திருச்சபை தன்னைப்பற்றிச் சுயஆய்வு செய்து, தனது இருப்பு இயல்பு குறித்துச் சரியான ஒரு புரிதலையும் பார்வையையும் பெற்றதனாலேயே இன்று பொதுநிலையினரின் அழைப்பும் அருள்பணியும்பற்றி நேர்நிலையாகச் சிந்தித்துப் பார்க்க முடிகின்றது.

திருச்சபை என்பது வெறும் நிறுவன அமைப்பு அன்று. அது ஓர் இயக்கம். கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்டு தூய ஆவியாரின் துணையாலும், தூண்டுதலாலும் வழிநடத்தப்படும் மக்கள் இயக்கம். இயேசு தொடங்கிவைத்த இறையாட்சியின் அடையாளமாகவும் அதைச் செயற்படுத்தும் கருவியாகவும் விளங்கும் இறைமக்கள் இயக்கம்.

கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்டு திருமுழுக்கு வழியாக அவரின் மறையுடலாகிய திருச்சபையின் உறுப்பினராகும் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் - இறைமக்கள் குழாம் ஆகின்றனர். "கிறிஸ்து இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கின்றீர்கள்" (கலா 3:26).

கடவுளின் பிள்ளைகள் என்னும் நிலை எல்லா மாந்தர்க்கும் பொருந்தும் என்றாலும், கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்டோருக்கு இது சிறப்பாகப் பொருந்தும். இது அவர்களுக்குரிய மாண்பு! இதனால் திருத்தந்தை, கர்தினால், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் இடையே அடிப்படைச் சமத்துவம் உண்டு. இது வரலாற்றுக் காரணங்களுக்காகக் கடந்த காலத்தில் மறைக்கப்பட்டிருந்தாலும் மறுக்கப்பட முடியாத உண்மை. "எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர்நிறை" (= சமம்) - பாரதி.

எனவே பொதுநிலையினர் திருச்சபையில் இரண்டாந்தரக் குடிமக்கள் அல்லர். அவர்கள் திருச்சபையில் இரண்டாம் தாரத்துப்பிள்ளைகள்போல் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதும் முறையன்று. "இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்" (கலா 3:28).



மேலும் கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகக் கிறிஸ்தவர்களைத் திருமுழுக்கு மாற்றுகின்றது. இதனால் அவர்கள் கிறிஸ்துவின் மும்பெரும் பணிகளான நற்செய்தி அறிவிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, தலைமை ஏற்று வழிநடத்தும் பணி ஆகியவற்றில் முழுப்பங்கு கொள்கின்றார்கள் (திருச்சபை 33-36). இவ்வாறு இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றி இறையாட்சியை நிறுவி நிலைநாட்டும் பணியாளர் ஆகின்றனர். இது அவர்கள்மீது சுமத்தப்பட்ட கடமை.

ஆயினும் பணியில் வேறுபாடு இருக்கிறது. திருத்தூதர் பவுல் திருச்சபையை மனித உடலுக்கு ஒப்பிடுகின்றார். உடலின் உறுப்புகள் பல ஆயினும் உடல் ஒன்றே. உடலின் ஒட்டுமொத்த நலன் கருதி உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. தன் தன் பணியைச் செவ்வனே செய்தால்தான் உடல் முறையாகவும் உயிராற்றலுடனும் செயல்பட முடியும். இதுபோன்று கிறிஸ்துவின் உடலாய்த்திகழும் திருச்சபையும் இலங்க வேண்டும், இயங்க வேண்டும்.

ஆவியாரின் திருப்பொழிவால் உருவானதுதான் திருச்சபை (திப 2:1-41). எனவே திருச்சபையின் உறுப்பினர் அனைவரும் ஆவியாருடைய அருள்கொடைகளுக்கு உரிமையாளர்கள். "நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, 'அப்பா தந்தையே' எனக் கூப்பிடுகின்றது. ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல, பிள்ளைகள்தாம். பிள்ளைகளாகவும் உரிமை பேறுடையவர்களாகவும் இருக்கின்றீர்கள். இது கடவுளின் செயலே" (கலா 4:6-7). ஆயினும் எல்லா வரங்களும் எல்லாருக்கும் ஒருசேர வழங்கப்படுவதில்லை. அவரவருடைய வாழ்க்கைநிலைக்கு ஏற்பவும் திருச்சபையின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு ஏற்பவும் வெவ்வேறு வரங்கள் அருளப்படுகின்றன. மாறுபட்ட பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. ஆதலின் அவர்கள் இவற்றைத் தத்தம் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தாமல் திருச்சபையின் பொது நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்த வேண்டும் (1 கொரி 12:1-11, 14:1-31).

தூய அகுஸ்தினாரின் கூற்று இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றது, "உங்களோடு நான் ஒரு கிறிஸ்தவன். உங்களுக்காக நான் ஓர் ஆயன். ஆயன் என்பது என்னிடம் ஒப்படைக்கப்பெற்ற பதவியின் பெயராகும். கிறிஸ்தவன் என்பது நான் பெற்ற அருளின் பெயராகும்." 'உங்களோடு நான் ஒரு கிறிஸ்தவன்' என்னும் கூற்று திருமுழுக்கினால் வரும் சமத்துவத்தையும், உங்களுக்காக நான் ஓர் ஆயன்' என்னும் கூற்று திருநிலைப்பாட்டால் வரும் பணி வேறுபாட்டையும் குறிக்கின்றன (திருச்சபை 32). இதன் விளைவாகத் திருச்சபையின் நலனின் கிறிஸ்தவர் அனைவருக்கும் ஆர்வமும் அக்கறையும் இருக்க வேண்டும். அனைவருக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு என்னும் உணர்வோடு கூட்டுச்செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

பொதுநிலையினரை விளிம்புக்குத் தள்ளிவிட்டுத் திருஆட்சியாளர் மட்டும் மையத்திலிருந்துகொண்டு ஆட்சிபுரிவதும், பொதுநிலையினரை ஆட்டிப்படைத்து அவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதும் கூடாது. மாறாகப் பொதுநிலையினரை இறையாட்சிப் பணியாளர்களாக ஏற்று, உடனுழைப்பாளர்களாக மதித்து, கூட்டுச் செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகின்றது: "திருச்சபை ஆட்சியாளரோடு எங்கு உண்மையாகவே பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ, அங்கு திருச்சபை உண்மையாகவே நிறுவப்படவுமில்லை, முழுமையாக வாழவுமில்லை, மனிதர் நடுவே கிறிஸ்வின் நிறை அடையாளமாகத் துலங்கவுமில்லை எனச் சொல்லலாம்: ஏனெனில் பொதுநிலையினர் செயல்முறையில் உடனிராவிட்டால் எந்த மக்களின் சிந்தனைப் பாணிகளிலும் வாழ்விலும் உழைப்பிலும் நற்செய்தி ஆழமாக வேரூன்ற இயலாது" (திருச்சபையின் நற்செய்திப் பணி, 21).

மேலும் அது கூறுவது, "அருட்பணியாளர்களோ திருச்சபையில் பொதுநிலையினர் கொண்டுள்ள மேன்மையையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அவற்றை மேம்படச்செய்ய வேண்டும். பொதுநிலையினரின் முன்மதியுள்ள அறிவுரையை விருப்புடன் அவர்கள் பயன்படுத்துவார்களாக. திருச்சபையின் பணிப்பொறுப்புக்களை அவர்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்து அவர்கள் சுதந்திரத்தோடு செயல்புரிய வாய்ப்பு அளிக்க வேண்டும். மேலும் தாங்களாகவே பணிகளை ஏற்று நடத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பொதுநிலையினர் பரிந்துரைக்கும் திட்டங்களையும் கருத்துக்களையும் ஆவல்களையும் தந்தைக்குரிய அன்புடன் கிறிஸ்துவின் மனநிலையோடு தனிப்பட்டவிதமாக கவனத்தில் கொள்ளவேண்டும்."

தனித்தனியாக செயற்படுவது எளிது. அனைவரும் இணைந்து சாதிய அமைப்புக்களைக் கடந்து ஒற்றுமையுடன் செயற்படுவது கடினம்: ஆனால், அது இன்றியமையாதது: உடனடித் தேவையும்கூட. தொடக்ககாலத் திருச்சபையில் இத்தகைய கூட்டுப்பொறுப்பையும் கூட்டுச்செயல்பாட்டையும் காண்கிறோம். குறிப்பாகத் திருச்சபையின் அன்றாட வாழ்விலும் பணியிலும் சிக்கல்கள் எழுந்தபோது அதன் உறுப்பினர்கள் செயற்பட்டமுறை தனிச் சிறப்பு வாய்ந்தது. பாகுபாடுகள் ஏற்றத்தாழ்வுகள் இன்றித் திருச்சபையார் ஒன்றுகூடிவந்து சிக்கல்களுக்குத் தீர்வுகண்டது குறிப்பிடத்தக்கது.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக எருசலேம் சங்கம் விளங்குகின்றது. சங்கத்தில் எட்டப்பட்ட முடிவுகளை ஒரு கடிதத்தில் பதிவுசெய்து அவற்றை திருச்சபைகள் நடுவே பரவலாக்க இருந்த வேளையில், "நாங்கள் ஒரு மனத்துடன் கூடிவந்து சிலரை தேர்ந்தெடுத்து எம் அன்புக்குரிய பர்ணபா, பவுல் ஆகியோரோடு உங்களிடம் அனுப்புவது என்று தீர்மானித்தோம். தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம்" (திப 15:25,28).

# தமிழ்த் திருப்பலிப் புத்தகத்தில் திருத்தங்கள்

உரோமன் திருவழிபாட்டுத் தமிழ்த் திருப்பலிப் புத்தகத்தில் மீளவும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திருத்தங்களோடு புதிய திருப்பலிப் புத்தகம் அண்மையில் வெளியிடப்பட்டு திருப்பலியில் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவையின் முயற்சியினால் புதிய திருப்பலிப் புத்தகம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதற்கு உரோமை வத்திக்கான் திருஅவையின் திருவழிபாட்டுத் திருப்பேராயமும் மற்றும் திருவழிபாட்டு, அருளடையாளங்களின் ஒழுங்குமுறைப் பேராயமும் ஒப்புதலும் அனுமதியும் வழங்கியுள்ளன. இத்திருப்பலிப் புத்தகத்தில் மாற்றங்களுக்குள்ளான சில பகுதிகள் இங்கே குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன:



திருத்தி அமைக்கப்பட்டு புதிதாக வெளிவந்திருக்கும் தமிழ்த் திருப்பலி நூல் ஜனவரி மாதம் 27ஆம் திகதியில் இருந்து மன்னார் மறைமாவட்டத்தில் பாவனைக்கு வருகின்றது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தெரிவித்துள்ளார்.

27ஆம் திகதி தோட்டவெளியில் நடைபெறும் மறைமாவட்டத் திருவிழாவின் போது இந்தப் புதிய நூல் முதன் முதலாகப் பயன்படுத்தப்படவுள்ளது. பங்குகளில் இந் நூலைப் பயன்படுத்தும் போது இந்நூலில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை இறைமக்களுக்கு தெளிவுபடுத்தி அல்லது அந்த மாற்றங்களை அச்சிட்டு வழங்கி இறைமக்கள் இந்த மாற்றங்களை பழக்கத்திற்கு கொண்டுவர ஆவன செய்யுமாறு பங்குத்தந்தையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### திருப்பலியின் தொடக்கம்:

**அருட்பணியாளர்:** தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

**மக்கள்:** ஆமென்.

**அருட்பணியாளர்:** நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும், உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**மக்கள்:** உம் ஆன்மாவோடும் இருப்பதாக. (முன்னைய திருப்பலிப் புத்தகத்தில் 'உம்மோடும் இருப்பதாக' என்று உள்ளது)

### உன்னதங்களிலே :

உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக. உலகினிலே நல்மனத்தோருக்கு அமைதி ஆகுக. உம்மைப் புகழ்கின்றோம், உம்மை வாழ்த்துகின்றோம், உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை மாட்சிப்படுத்துகின்றோம், உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே, இயேசுக் கிறிஸ்துவே, ஆண்டவராகிய இறைவா, இறைவனின் செம்மறியே, தந்தையின் திருமகனே, உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும். உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும். ஏனெனில் இயேசுக் கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர், நீர் ஒருவரே ஆண்டவர், நீர் ஒருவரே உன்னதர். தூய ஆவியாரோடு தந்தையாகிய இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே, ஆமென்.

### விசுவாச அறிக்கை :

ஒரே கடவுளை நம்புகின்றேன். விண்ணகமும், மண்ணகமும், காண்பவை காணாதவை யாவும் படைத்த எல்லாம் வல்ல தந்தை அவரே. கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை நம்புகின்றேன். இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்தே பிறந்தார். கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர். தந்தையோடு ஒரே பொருளானவர், இவர் வழியாக யாவும் படைக்கப்பட்டன. மனிதர் நமக்காகவும் நம் மீட்புக்காகவும் விண்ணகம் இருந்து இறங்கினார். தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடல் எடுத்து மனிதனானார். மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டு பாடுபட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். விண்ணகத்துக்கு எழுந்தருளி எல்லாம்வல்ல தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார். வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட மாட்சியுடன் மீண்டும் வரஇருக்கின்றார். அவரது ஆட்சிக்கு முடிவிராது. தந்தையிடமிருந்தும், மகனிடமிருந்தும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகின்றேன். இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார். இறைவாக்கினர் வாயிலாகப் பேசியவர் இவரே. ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும் திருஅவையை நம்புகின்றேன். பாவமன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன். இறந்தோரின் உயிர்ப்பையும் வர இருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கிறேன், ஆமென்.

### தொடக்கவுரை:

**அருட்பணியாளர்:** ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

**மக்கள்:** உம் ஆன்மாவோடும் இருப்பதாக. (முன்னைய திருப்பலிப் புத்தகத்தில் உம்மோடும் இருப்பதாக என்று உள்ளது)

**அருட்பணியாளர்:** இதயங்களை மேலே எழுப்புங்கள்

**மக்கள்:** ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.

**அருட்பணியாளர்:** நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

**மக்கள்:** அது தகுதியும் நீதியும் ஆனதே.

## தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு கலையருவி நடாத்திய

## கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

# குடும்பங்களை கட்டியெழுப்பிய தூய யோசவ்வாஸ்

இராகுலன் அருள் றொகேஷன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.

புனித யோசவ்வாஸ் இந்திய நாட்டின் கோவா மாநிலத்தில் உள்ள பெனாலிம் என்னும் தனது தாயின் ஊரில் 1651ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை கிறிஸ்தோப்பர் வாஸ், தாய் மரிய டி மிராண்டா இருவரும் உயர்குலமான பிராமண வகுப்பைச் சேர்ந்த கொங்கணி இந்தியர். கோவாவில் உள்ள கொங்கணிப் பிராமணர்கள் 16ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்களாக மாறினார்கள்.

போர்த்துக்கேயரின் சமய, சமூகப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்வதில் கொண்டிருந்த ஆர்வத்தினால் தங்கள் இனம், குலம் ஆகியவற்றிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டார்கள்.

யோசவ்வாஸ் பிறந்து 8ஆம் நாள் பங்கு ஆலயமான திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இயேசுசபைக் குருமுதல்வர் யசிந்தோ பெரேரா என்பவரிடம் திருமுழுக்குப் பெற்றார். யோசவ்வாஸ் சிறிய வயதில் இருந்தே இறை ஊக்கத்தில் வளர்வதற்கு அவரது குடும்பச்சூழல் காரணமாக அமைந்திருந்தது.

கிறிஸ்தோப்பர் வாஸின் இரண்டு விதவைச் சகோதரிகள் அவர்களுடன் வாழ்ந்த காரணத்தினால் வழிபாடுகள், செபங்கள், செபமாலைத் தியானங்கள் எனப் பக்திமுயற்சிகளில் பாலர் பருவத்திலிருந்தே வாஸ் ஈடுபட்டார். சிறிய வயதில் இருந்தே கதவைச் சாத்திவிட்டுத் தியானம் செய்யும் அளவிற்கு ஊக்கம் பெற்றிருந்தார்.

இவரது சிறுவயதில் அதீத பக்தியை அவதானித்த தந்தையார் இறைபணிக்கு அவரை அர்ப்பணிக்க நினைத்தார். மேல்நிலைப் பள்ளியில் சேர்த்தார். தனது நற்பண்புகளால் பலராலும் கவரப்பட்டார். குருத்துவக்கல்வியை தொடர்ந்தார். தனது 25வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன்பின் தனது பணியை மேற்கொண்டார். இவ்வாறு இவரது சிறுபராய வாழ்வு, குருத்துவக்கல்வி என்பன அவரது இறைபோதக வாழ்வுக்கு பின் நாட்களில் உறுதுணையாக அமைந்தன.

இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு பல்வேறு பணிகளை முன்னெடுத்தார். அவற்றில் குடும்பங்களைக் கட்டியெழுப்ப சமயப்பணிகள், கல்விப் பணிகள், குருத்துவப் பணிகள், மறைப்பணிகள் மூலம் தனது முயற்சிகளை மேற்கொண்டார்.

புனித யோசவ்வாஸ் குடும்பங்களைக் கட்டியெழுப்பப் பல பணிகளை மேற்கொண்டார். இவர் மேற்கொண்ட பணிகளில் செபம் மற்றும் புதுமை என்பன முக்கியமான அம்சமாகும். இவர் குடும்பங்களைக் கட்டியெழுப்ப ஆன்மீக ரீதியில் மேற்கொண்ட பணியை அவரது வாழ்வில் இடம்பெற்ற சம்பவம் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். மற்றும் அடிகளாரின் புதுமை மூலமும் நாம் அறிந்துகொள்ளலாம்.

இந்தியாவைச் சேர்ந்த திருமதி குயிற்றேறியா கர்மேலா என்பவர், திரு. டொமியாவோ டிகொங்கா என்பவரை மணந்திருந்தார். அவர் 1938, ஏப்ரல் மாதமளவில் கருவுற்றிருந்தார். கர்மேலா சுமார் நான்கு மாதங்களுக்குப் பின்னர் Hemorrhages என்னும் நோயினால் பீடிக்கப்பட்டார். இதன் விளைவாக கருச்சிதைவு ஏற்படக்கூடிய நிலை இருந்தது. இதனால் உடனடியாக பெங்களூர் புனித மார்த்தா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவரைப் பரிசோதித்த பிரதம வைத்திய குழுவினர் இவரைப்பீடித்துள்ள நோயின் பெயர் Placento Praevia என அறிவித்தனர். நவம்பர் 26ஆம்



திகதி அவரது நோயின் தாக்கம் அதிகரித்துக்கொண்டு சென்றது. குழந்தையைப் பெற்றெடுக்க முடியாத நிலையில் இவர் உள்ளார் என வைத்திய குழுவினர் தெரிவித்துவிட்டனர். அன்று அவரது பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் இணைந்து கார்மேலாவின் நோய் நீங்கவும் குழந்தையைச் சுகமாகப் பிரசவிக்கவும் யோசவ்வாஸ் அடிகள் ஊடாக இறைவனிடம் வேண்டுதல் செய்தனர். மறுநாள் 27ஆம் திகதி காலை யாருமே எளிதில் நம்பமுடியாத நிலையில் அவரது நோய் சடுதியாக சுகம் அடைந்திருந்ததை அவதானித்தனர். அன்று மாலை உயிர் வாழ்வுத்திறன் கொண்ட நிலையில் பருவநிலை அடையா குழந்தையின் கால் முதலில் வெளிவந்தது. பின்னர் குழந்தை சுகமாகப் பிறந்தது. அதேவேளை தாயாரும் நலமாக இருந்தார். அக்குழந்தைக்கு கொஸ்மே டி கொஸ்தா எனப்பெயரிட்டனர். மற்றும் அக்குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், யாவரும் யோசவ்வாஸ் அடிகளாரின் இறைவாழ்வில் ஊன்றி இறை குடும்பமாக வாழ்ந்தனர். இவ்வாறு வாஸ் அடிகளார் பெயரால் இடம்பெற்ற புதுமைகள் மூலம் குடும்பங்கள் ஆன்மீக ரீதியில் கட்டியெழுப்பப்பட்டன.

யோசவ்வாஸ் அடிகள் தனது குருத்துவப்பணி மூலம் பல குடும்பங்களை கத்தோலிக்க இறை குடும்பங்களாகக் கட்டியெழுப்பினார். குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும் சொந்த இடமான சன்கோலில் பணிசெய்ய அனுப்பப்பட்டார். அங்கு பக்தியுடன் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இறைவார்த்தையை எடுத்துரைத்து மறையுரையாற்றினார். ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றல், இறந்தோருக்காகச் செபித்தல் போன்ற விடயங்களிலும் அக்கறை எடுத்துக்கொண்டார். இவரது பிரசங்கத்தினால் பல குடும்பங்கள் ஈர்க்கப்பட்டு மனமாற்றப்பட்டார்கள்.

சிறந்த பிரசங்கியாகப் பெயர்பெற்ற இவர் குடும்பங்களின் மறை போதகராகக் காணப்பட்டார். இவர் திருப்பலி ஒப்புக்கொடுக்கும்போது அனைவரும் குடும்பமாக வந்து அவர் பிரசங்கத்தினால் ஈர்க்கப்பட்டு கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக்கொண்டனர். அப்போதைய கோவைப் பிராந்தியத்தின் அரச மேலாளராக இருந்தவர் தனது வாழ்வையும் மாற்றி நிர்வாகத்தையும் சீர்செய்யுமளவுக்கு யோசவ்வாஸின் ஆன்மீகப் போதனை வலுவாக இருந்தது. இவர் நீண்ட பல மணித்தியாலங்களாக பாவமன்னிப்பு அருட்சாதனங்களை அளித்ததோடு சிலுவைப்பாதைத் தியானத்துடன் ஏனைய பக்தி முயற்சிகளையும் நடத்தினார். இவ்வாறான பக்தி முயற்சிகள் வினைத்திறனுடைய பல நற்பயன்களை விளைவித்தன.

ஆன்மீக வழிகாட்டல்கள் இன்றி மக்கள் மிகுந்த அல்லல்பட்டனர். சிதறிக்கிடந்த மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சிறிய சிறிய கோவில்களை அமைத்து சிறிய குடும்பங்களை ஒன்றிணைத்து கத்தோலிக்க சமயத்தை உருவாக்கிப் புத்துயிர் அளித்தார். இதனால் எல்லா இடங்களிலும் வாழ்ந்த குடும்பங்களுக்கு புத்துணர்ச்சியையும், புதுப்பொலிவையும் ஏற்படுத்தினார். பலரின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு இப்பணியில் அடிகளாரின் பங்களிப்பு காத்திரமானதாக இருந்தது.

யோசவ்வாஸ் அடிகளார் இலங்கைக்கு வரும்போது கத்தோலிக்கர்கள் துன்புறுத்தப்பட்டனர். ஒல்லாந்தர் காலத்தில் மக்கள் ஏறக்குறைய 30 வருடங்கள் குருமாரைக் காணாமலும், திருப்பலியில் பங்குபெறாமலும், அருட்சாதனங்களைப் பெறாமலும் தவித்துக்கொண்டிருந்தனர். யோசவ்வாஸ் அடிகளார் இலங்கைக்கு வந்தார் எனும் செய்தியைக்கேட்டு ஆனந்தமடைந்து தங்களைத் தேடிவந்த குருவானவரைப் பாதுகாப்பதற்கும் அவருடைய ஆன்மீக உதவியைப் பெறுவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தனர்.

யோசவ்வாஸ் அடிகளார் மாறுவேடம் பூண்டு இராக்காலங்களில் வீடுவீடாகச் சென்று குடும்பங்களைத் தரிசித்து ஒவ்வொரு குடும்பங்களையும் ஆன்மீகத்திலும், கிறிஸ்தவ விசுவாசத்திலும் தனது மறையுரையினால் வளர்த்துவந்தார்.

வேதத்தை மறுதலித்த குடும்பங்களைத் தரிசித்து அவர்களில் பலரையும், சில புரொட்டஸ்தாந்தரையும், இந்துக்களையும் மனந்திருப்பினார். எதிர்பாராதவிதமாக ஒரு குருவானவரின் உதவியைப்பெற்ற கத்தோலிக்க மக்கள் விசுவாசத்தில் திடமும் புத்துணர்ச்சியும் பெற்றுவந்தனர். இவ்வாறு இலங்கையில் கத்தோலிக்க குடும்பங்கள் வாஸ் அடிகளாரின் பணிகளால் கட்டியெழுப்பப்பட்டன.

புனித யோசவ்வாஸ் அடிகளார் குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். 1686ஆம் ஆண்டளவில் கண்டியில் கொடிய உயிர்கொல்லி நோயான வைசூரி வேகமாகப் பரவியது. நோயாளிகள் கைவிடப்பட்டுக்கிடந்தனர். இறந்தவர்களை அடக்கம்செய்யக்கூடத் தயங்கினர். உடல்களைக் காடுகளிலே வீசினர்.

வசதிப்படைத்தோர் இடம்பெயர்ந்து ஓடித்தப்பினர். இத்தகைய சூழலில் அடிகளாரும் இரண்டு குருமாரும் நோயாளிகளை ஒன்றுசேர்த்து சேவையாற்றத் தொடங்கினர். நோயாளருக்கு கஞ்சி சுமந்து கொண்டுசென்று கொடுத்தல், உடை இல்லாதவர்களுக்கு உடை வழங்குதல், நோயாளிகளின் புண்களைத் தூய்மைப்படுத்தி மருந்திடல், இறந்தோரை அடக்கம் செய்தல் என்று பாரிய பணிகளைச் செய்து அந்த மனிதப் பேரவலத்திற்கு உதவிபுரிந்தனர். இவர்களது சேவையைக்கண்ட பல நோயாளிகள் மனம்மாறி திருமுழுக்குப் பெற்றனர். அவரது பெருமுயற்சிகளும் அர்ப்பணிப்புமிக்க வாழ்வும், இறை பக்தியும், தன்னம்பிக்கையும் கத்தோலிக்க திருச்சபையை வேகமாகத் தழைக்கச் செய்தன.

கத்தோலிக்க திருச்சபையை இனம்காணுவதற்கு அவர் வீடுவீடாகத் திரிந்து பிச்சை எடுத்தார். இவர் நோயினாலும் பசியினாலும் மெலிந்து நீண்ட தாடியுடனும், இரப்பவர்க்குரிய அடிமை உடையுடனும் உண்மையாகவே இரப்பவராக மாறி கத்தோலிக்க குடும்பங்களைத் தேடிச்சென்று கத்தோலிக்க சமயத்தை வளர்த்தார். இவ்வாறு தன்னை முழுமையாகக் கத்தோலிக்க குடும்பங்களைக் கட்டியெழுப்ப அர்ப்பணித்தார். நாமும் எமது சமூகத்தில் புனித யோசவ்வாஸ்சைப்போல கிறிஸ்தவ குடும்பங்களைக் கட்டியெழுப்புவோம்.

# தூய யோசவ்வாஸ் ஆண்டுப் போட்டிகளும் விருது வழங்கும் விழாவும் - ஒரு கண்ணோட்டம்

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
திரு. அ. அந்தோனிமுத்து

தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவி இயக்குனர் ஆற்றிய பாரிய பங்களிப்பைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. அவரது பொறுப்பிலுள்ள 'கலையருவி', 'மன்னா' பத்திரிகை ஆகிய தொடர்புசாதனங்கள் மூலம் அவர் ஆற்றிய பெரும்பணி அனைவர் மனங்களிலும் நீங்கா இடம்பெற்றுள்ளன.

'எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு' எனும் வள்ளுவன் குறளுக்கேற்ப நன்கு திட்டமிட்டு, பத்துத் தலைப்புக்களில் போட்டிகளை உருவாக்கி 3 மாத முன்னறிவித்தலுடன் 'மன்னா' பத்திரிகை விளம்பரத்தின் மூலம் இதில் அக்கறையுள்ளவர்கள் ஆவலுடன் ஈடுபட வழிவகுத்தார். போட்டிக்குதவியாக தூய யோசவ்வாஸ் பற்றிய புத்தகம் ஒன்றையும் வெளியிட்டார். இதன் மூலம் போட்டியாளர் தேடலில் ஈடுபட்டு தத்தம் போட்டிகளில் ஆர்வமுடன் பங்குபற்றக் கூடியதாயிருந்தது. மாணவர் அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், கல்வியியலாளர், குருக்கள், சகோதரிகள் அனைவரது பங்களிப்பும் இவ்விழாவிற்கான வெற்றிக்கு வழிவகுத்தன.

கலையருவி வகுத்த விதிகளுக்கமைவாக பங்குமட்டங்களின் போட்டிகள் நடாத்தப்பட்டு அதிலிருந்து தெரிவாகிய போட்டியாளர்கள் மறைமாவட்ட மட்டப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்டனர். ஒவ்வொரு பிரிவுக்கும் தகுதி வாய்ந்த நடுவர்கள் மூலம் தெரிவுகள் நடாத்தப்பட்டன. முதல் ஐந்து இடங்களைப்பெற்ற போட்டியாளர்களின் விபரங்கள் படங்களுடன் மன்னாவில் பிரசுரிக்கப்பட்டு வெளியானமை பாராட்டுக்குரியது.

இவை யாவிற்கும் முத்தாய்ப்பு வைத்ததுபோல் கடந்த 20.12.2017இல் குடும்பநலப்பணியக மண்டபத்தில் இடம்பெற்ற சான்றிதழ், விருது வழங்கும் விழா சிறப்பாக அமைந்தது. எமது அன்பிற்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், குருமுதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை,




குடும்பநலப்பணியக இயக்குநர் அருட்பணி எஸ். கே. தேவறாஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்ட இந்நிகழ்வு சரியாக 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. வழமையான சம்பிரதாய நிகழ்வுகளைத் தொடர்ந்து மறைமாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டன. கண்கவரும் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாயின. அத்தனை நிகழ்வுகளும் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைத் துல்லியமாக விளக்கக்கூடிய வகையில் அமைந்திருந்ததுடன், வெற்றி பெற்றோருக்கான சான்றிதழ்களும், விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் நடுவர்களாகப் பணியாற்றியவர்களும் அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டு நினைவுச் சின்னங்களையும் பெற்றுக்கொண்டார்கள். குறிப்பாக இவரது மேற்படி பணியில் முக்கிய பங்கினை ஆற்றிய ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி. பெப்பி லெம்பேட் அவர்கள் விசேட விதமாகப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது.

காட்சிப்படுத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தமையை அனைவரும் ஏற்றுக்கொள்வர் அனைவருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும்! தனி நடனத்தில் முதலிடம் பெற்ற வவுனியாப் பங்கு மாணவி பிரபாகரன் சிபியாவின் பரத நாட்டியம் என்னை மிகவும் கவர்ந்தது. இறுதி நிகழ்வாக இடம்பெற்ற முதல் இடம்பெற்ற வவுனியாப் பங்கு 'நாடகம்' அரங்கமேடை நிறைந்த மாணவ மாணவிகளைக் கொண்டு (ஏறக்குறைய 25 பேர்) சிறந்த பின்னணி இசையுடன் தனி ஒருவரின் குரல்வளத்தின் திறமையினால் சிறந்த முறையில் அரங்கேறியது. குறிப்பாக ஒல்லாந்த தளபதியாக நடித்தவரின் வேடப்பொருத்தம், நடிப்பு, பாராட்டுக்குரியது. அத்தனை மாணவர்களும் துடிப்பாக சோர்வேதுமின்றி நடித்து நாடகத்தின் வெற்றிக்குப் பங்களிப்பு நல்கினர். அனைவருக்கும் பாராட்டுக்கள்! குறிப்பாக நாடகத்தைத் தயாரித்து நெறிப்படுத்திப் பின்னணி வாத்திய இசையுடன் அரங்கேற்றிய திரு. இராயப்பு ஜெயரூபன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

நிகழ்வின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை பொறுமையாக நின்ற நிலையில் அத்தனை நிகழ்வுகளையும் தனது ஊடகத்தில் ஆவணப்படுத்திய கலையருவியின் முன்னாள் இயக்குநர் அருள்திரு அந்தோனிதாஸ் டலிமா அவர்களுக்கும் நன்றிகள்.

நிறைவாக மன்னார் மறைமாவட்டத்தின் சகல பகுதிகளிலுமுள்ளவர்களை 'மன்னா' பத்திரிகை மூலம் தொடர்புகளை ஏற்படுத்தித் திட்டமிட்டுச் செயலாற்றி இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்த கலையருவி இயக்குனர் அவர்களை மனதார வாழ்த்தி வணங்குகின்றேன்.

**அன்புடன், அ. அந்தோனிமுத்து.**

# புதிய மன்னார் ஆயருக்கான வரவேற்பும் பணிப்பொறுப்பு ஏற்பு நிகழ்வும்



# தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு
# ‘கலையருவி’ நடாத்திய போட்டிகளுக்கான விருது விழா!











**– பத்து வகையான போட்டிகள்**
**– ஒவ்வொரு போட்டியிலும் நான்கு பிரிவுகள்**
**– 60 இற்கும் அதிகமானவர்களுக்கு விருதுகள்**
**– 250 இற்கும் அதிகமானவர்களுக்கு சான்றிதழ்கள்**
**– முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் புகைப்படங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்பட்டன!**

தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையம் ‘கலையருவி’யினால் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளுக்கான விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி மன்னார் குடும்பப்பணி நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார், குடும்பம் மற்றும் பொதுநிலையினர் பணி இயக்குனர் எஸ். கே. தேவராஜா அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட், முன்னாள் மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். மாட்டின் டயஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு கலையருவி அமைப்பினால் கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம், தனிப்பாடல், குழுப்பாடல், தனி நடனம், குழு நடனம், நாடகம், இறுவட்டுப் பாடல் எனப் பத்து வகையான போட்டிகள் நடாத்தப்பட்டன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு விருதுக் கேடயமும், முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவர்களின் பெயர் விபரங்களும் புகைப்படங்களும் கடந்த மாத மன்னா பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களின் மேடை நிகழ்வுகள் இந்த விருது விழாவின்போது அரங்கேற்றம் செய்யப்பட்டன. போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு இந்நிகழ்வின்போது சிறிய அன்பளிப்பும் வழங்கப்பட்டது.


இப்போட்டிகள் மூலமாக மாணவர் மத்தியிலும், வளர்ந்தோர் மத்தியிலும் தூய யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வு மற்றும் பணிகள் பற்றிய ஆழமான விழிப்புணர்வு ஏற்பட்டமை பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஒளிவிழா











# மன்னார் மறைமாவட்டக் குருக்கள் துறவியருக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்










மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவியருக்கான வருடாந்தக் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் கடந்த 16.12.2017அன்று சனிக்கிழமை காலை மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்றது. பெருந்தொகையான குருக்களும், துறவிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வுக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் தலைமை தாங்கினார். இரண்டு பகுதிகளாக இந்நிகழ்வு இடம்பெற்றது. முதல் பகுதியில் மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் தியான வழிபாடு நடைபெற்றது. இரண்டாவது பகுதியாக பேராலயக் கேட்போர் கூடத்தில் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது. பல்வேறு குருக்கள், துறவிகளின் குழுமங்கள் சிறப்பான கலை நிகழ்வுகளை வழங்கினார்கள். அத்துடன் மகிழ்வூட்டும் பல விளையாட்டுக்களும் இடம்பெற்றன. குருக்கள் துறவியர் இவற்றில் ஆர்வத்தோடு பங்கேற்றனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் அண்மையில் தியாக்கோன்களாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்சகோதரர்கள் றஞ்சன், பஸ்ரியன், சதாஸ்கர், தேவராஜன் ஆகியோர் இந்நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தொகுத்து வழங்கினர். இறுதியில் கிறிஸ்து பிறப்பு மகிழ்வுப் பரிசுகளுடனும், மதிய உணவுடனும் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற்றன.



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 70

## வாக்களிப்பிலிருந்து விலகி வாக்காளர் தவறிழைக்கக் கூடாது!

### இலங்கையிலும் பா.ஜ.க. வராமல் பார்த்துக்கொள்ளட்டும்!

சோமாலிய நாட்டில் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கடனாக இந்தியாவில் இருந்து 'ஓட்டர் மிஷினை' வாங்கி கணணி முறையில் இலகுவாக வாக்குப்பதிவு செய்யவும், வாக்குகளை எண்ணவும், அதிக செலவில்லாமல் தேர்தலை நடத்தவும் சோமாலிய நாட்டு அரசு ஏகமனதாக முடிவுசெய்தது.

வாக்குப்பதிவு குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்றது. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் சாரைசாரையாக மக்கள் மயங்கி விழுந்தார்கள்! ஏனெனில் அனைத்து இடங்களிலும் பாரதிய ஜனதா கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தது!

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டு அவசியமானது

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் (தமிழர் விடுதலைக் கூட்டணியும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது) ஆகிய நான்கு கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தது. இக்கட்சிகள் நான்கும் தத்தமது கொள்கைகளோடு தமிழர்களின் விடுதலைக்காக வெவ்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கின்றன. அது மட்டுமல்லாது இக்கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மாறுவதற்கு முன்பு வெவ்வேறு காலகட்டங்களில் தனித்தனியே தேர்தல்களில் போட்டியிட்டன என்பதும் வரலாறு.

இக்கட்சிகள் நான்கும் சேர்ந்து ஒன்றாக வந்தது மட்டுமல்லாது, அரசியலில் பங்கேற்பது, தேர்தலில் நிற்பது போன்றவை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தேசிய, சர்வதேச ரீதியில் ஒரு பெரிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதப்பட்டது, கருதப்படுகின்றது. இக்கட்சிகள் ஒன்றாய் நின்றதனால், ஒன்றிலொன்று தங்கியிருந்ததனால் இதுவரை காலமும் இக்கட்சிகளின் ஆயுள் ஒருவகையில் உயிரோட்டத்தோடு நீடிக்கின்றது எனலாம்.

### உடைவை ஒட்டாதுவிட்டால் நலன் கிட்டாது!

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுள் ஒன்றான தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளும், தன்னிச்சையான போக்குகளும் ஏனைய மூன்று பங்காளிக் கட்சிகளுக்கும் மட்டுமல்லாது ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் அவ்வப்போது அதிருப்தியை ஏற்படுத்தி வந்ததை அவதானிக்கலாம். இதன் காரணமாக கீரைக்கடைக்கு எதிர்க்கடை என்பதுபோல ஒரு மாற்றம் தேவை என்ற கருத்து பல தரத்தாரிடத்தில் சில ஆண்டுகளாக நிலவிவந்ததைப் பலரும் அறிவார்கள்.

இந்நிலை வலுப்பெற்றதன் காரணமாகவும் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் (வேறுவேறு காரணங்களும் இருக்கக்கூடும்!) ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமாரும் சேர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஈடான மாற்றணியாக ஒரு கூட்டமைப்பை உருவாக்க எண்ணினார்கள். ஆனால் இவர்களின் கூட்டணி இருபத்தொரு நாள்களே நீடித்தது! இந்நிலையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சில கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து உதயசூரியன் சின்னத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணியாக இவ்வாண்டு (2018) மாசித்திங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார். தமிழ் காங்கிரஸின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரக்குமார் தமிழ்த் தேசியப் பேரவையின் பெயரில் துவிச்சக்கரவண்டிச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

### இருக்கைகளைப் பார்க்க, கொள்கைகளைப் பாருங்கள்!

புளொட் அணியின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியுடனான அதிருப்தியில் தேர்தலைக் காரணமாக வைத்துக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகாமல் 'தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒன்றாக இருக்கவேண்டும் என்ற கொள்கைக்காகவேனும் தேர்தலில் இருந்து விலகி தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இருப்போம்' எனத் தமிழரசுக் கட்சியுடன் அதிருப்திப்பட்ட ஒரு சூழலில் கூறியிருக்கின்றார். மக்களின் நலனையும் நீண்டகால அரசியல் பயணத்தையும் முன்வைத்துச் சிந்திப்பவர்கள் இவ்வாறுதான் சிந்திக்கவேண்டும்! முரண்பாடுகள், சிக்கல்கள் ஏற்படலாம், எனினும் இவ்வாறான நேரங்களில்தான் விவேகமான தீர்மானங்களை மேற்கொண்டு புத்திக்கூர்மையான செயற்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டும்.

### தமிழ் மக்கள் பேரவையை 'வில்லன்'ஆகப்பார்க்க வேண்டிய தேவையில்லை!

தமிழ் மக்கள் பேரவை தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகளில் கவனம் செலுத்திவருகின்ற நிலையில் தேர்தல்களில் நிற்பதில்லை என்ற நிலைப்பாட்டுடன் தொடர்ந்து பயணிக்கின்றது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் போக்குகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் செயற்பாடுகளிலும் திருப்தியளிக்காத நிலையில் மக்களின் பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் உள்வாங்கி இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தைத் தெளிவாக முன்வைத்துள்ளார்கள் தமிழ் மக்கள் பேரவையினர். மிக முக்கியமான, காத்திரமான ஒரு பெரும்செயலைச் செய்து முடித்திருக்கின்றார்கள் தமிழ் மக்கள் பேரவையினர்.




தமிழ் மக்கள் பேரவை ஒரு சிந்தனை வட்டம் (think-tank) ஆக இயங்குவது மிகப் பொருத்தமானதும் காலத்தின் தேவையான ஒரு செயற்பாடாகும் எனக் கொள்ளலாம். அவ்வாறாக மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து சிந்திப்பது அரசியல்வாதிகள் தான்தோன்றித்தனமாக செயற்படாமல் இருக்க வழிவகுப்பதோடு மக்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு நல்லாலோசனைகளை வழங்கவும் முடியும்.

ஆயினும் தமிழ் மக்கள் பேரவையின் வரவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழு விருப்போடு ஏற்றதாகத் தகவல்கள் இல்லை. அதேபோல அதன் வரவிற்கு முழுமையான எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் வரவையும் அதன் நோக்கத்தினையும் புரிந்துகொண்டு தமிழ் மக்கள் பேரவையின் மக்கள் நலன் சார்ந்த கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதோடு அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வரவேண்டும்.

அதற்குமுன் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் இடையிலான உறவு ஆரோக்கியமானதாக அமைய வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் பேரவையை 'வில்லன்'ஆகப் பார்க்காது, தமிழ் மக்களின், தமிழ்பேசும் மக்களின், நாட்டு நலனில் அக்கறை கொண்ட சமூக அமைப்பாக நோக்குவது பல்வேறுபட்ட நன்மைகளை உருவாக்கும்.

மேலும் இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் பேரவை தேர்தல்களில் ஈடுபடாமல் நடுநிலைமை வகித்தாலும் மக்கள் நலன் சார்ந்து அர்ப்பணிப்போடு செயற்படுகின்றவர்களை இனம்காண்பதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் உள்வாங்கச் செய்வதும் அவர்களை தேர்தல்களில் பங்கேற்கச் செய்து மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கவும் உதவிபுரியலாம். இவ்வாறு ஒருமனப்பட்ட கருத்தோடு செயற்படவும், மக்களின் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவும், அரசியல் தீர்வு குறித்த சரியான தெளிவான நிலைப்பாடுகளைத் தொடர்ந்து முன்வைக்கவும், முன்னெடுக்கவும் தமிழ் மக்கள் பேரவை தொடர்ந்து பாடுபடவேண்டும்.

### முரண்பாடுகளைக் களைய முற்பட்டிருக்க வேண்டும் முதலமைச்சர்!

வடமாகாண முதலமைச்சர் சீ. வி. விக்னேஸ்வரன் இன்றைய சூழலில் கட்சிகளைப் பார்க்காமல் ஊழலற்ற, நேர்மையானவர்களைத் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரியும்படி கேட்டிருக்கின்றார். முதலமைச்சரின் கருத்துச் சரியானது என்று வைத்துக்கொண்டாலும் இவ்வாறானவர்கள் ஓரணியில் நின்று செயற்படுவதுதான் நன்மை பயக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலமைச்சருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவு சுமுகமாக இல்லை என்பது யாவரும் அறிந்த விடயம். நீதியரசர் சீ. வி. விக்னேஸ்வரனை முதலமைச்சராக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும்தான் என்றாலும் அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியே முக்கிய வகிபாகம் வகித்தது என்றே சொல்லப்படுகின்றது.

அவ்வாறே தமிழரசுக் கட்சிதான் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராக நிறுத்துவதில் முன்னிலை வகிப்பதாக வைத்துக்கொண்டாலும் அக்காரணத்திற்காக தமிழரசுக் கட்சியின் தாளத்திற்குத்தான் அவர் ஆடவேண்டும் என்ற அவசியம் கிடையாது! அதேவேளை மக்களின் ஆணையைமீறி முதலமைச்சரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பைச் சார்ந்த ஏனைய கட்சிகளோ செயற்படவும் கூடாது.

அதேவேளை முதலமைச்சரும் தமிழரசுக் கட்சியுடனான தமது முரண்பாடுகளைத் தீர்த்து ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி இருக்கலாம், ஏற்படுத்தியிருக்கவேண்டும். முதலமைச்சர் அவ்வாறு முயன்று, அம்முயற்சியில் வெற்றிபெற்றிருந்தால் இன்றைய தமிழ் அரசியல்வாதிகளின் அல்லது தமிழ் கட்சிகளின் நிலைப்பாடுகளில் பாரிய பிளவுகள் ஏற்படாமல் தடுத்திருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதேபோல தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவிய முரண்பாடுகளைத் தீர்க்க தங்களது முழுமையான ஈடுபாட்டினைக் காட்டவில்லை, ஒத்துழைப்பை வழங்கவில்லை என்பதுபோலத்தான் தெரிகின்றது.

ஆக, 'மணிகட்டுவது யார்?' என்ற பிரச்சினைதான் அடிப்படையில் பெரும் பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது. ஆனால் இருசாராரும் பக்கம்பக்கமாக பத்திரிகைகளுக்குப் பதில் எழுதுவதிலும் விளக்கம் அளிப்பதிலும் காலத்தையும் சக்தியையும் செலவழித்துக்கொண்டு இருக்கின்றார்கள். இவர்களின் 'தண்டவாளப் போக்குகள்' சாதாரண மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணி இருக்கின்றது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

### அடிப்படைகளை ஈடுவைக்கக் கூடாது

பிளவுண்டு போவதால் ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை என்பதை மக்களின் அரசியல் தலைவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். அத்துடன் பிரிவுகள் மேலும் மேலும் பிரிவினைகளைத்தான் உருவாக்கும். முப்பது ஆண்டுகாலம் மாபெரும் ஆயுதப்போராட்டத்தை நடத்தி அதன் ஊடாகப் பெற்றிருக்கவேண்டிய உரிமைகளை இழந்தநிலையில் மேலும் நாம் கட்சி கட்சியாகப் பிரிந்துநின்றுகொண்டு நாம் விரும்பும் அரசியல் அபிலாசைகளை அடையமுடியாது என்ற யதார்த்தத்தையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, அடிப்படை அம்சங்களை ஈடுவைக்காது அரசியல் வலுவைப் பயன்படுத்தி கூடுதலான அதிகாரப் பகிர்வைப் பெறுவதே இக்காலத்தில் யதார்த்தபூர்வமானதும் புத்திசாலித்தனமானதும் ஆகும்.

### இடைக்கால அறிக்கை குறித்த குழப்பம்!

அரசியல் தீர்வுத் திட்டம் சம்மந்தமாக இலங்கை அரசினால் முன்மொழியப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்து எதிரும் புதிருமான கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முதலமைச்சர் தலைமையிலான அல்லது முதலமைச்சர் சார்பான குழுவும் முன்வைத்து வருகின்றார்கள். 'இது ஓர் இடைக்கால அறிக்கையே! அதில் எல்லா விடயங்களும் குறிப்பிடப்படவில்லை, குறிப்பிடவும் முடியாது! இறுதிவரைபு வருகின்றபோது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் உள்ளடக்கப்படும்!' எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுகின்றது.

மறுபக்கம், 'இடைக்கால அறிக்கையிலேயே அடிப்படையானவைகள் இல்லை என்றால் இறுதிவரைபில் என்ன இருக்கப்போகிறது?' என ஆதங்கப்படுகின்றார்கள் முதலமைச்சரும் அவர் சார்ந்த அணியினரும்! இவ்வாறு இவர்கள் இரண்டுபட்டுக் கிடக்கையில் யாருடைய கருத்தை ஏற்றுக்கொள்வது என்று தமிழ் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றார்கள் என்பது மட்டும் அப்பட்டமான உண்மை! இந்நேரத்தில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் வந்து சேர்ந்திருக்கின்றது.

### விசமத்தனமான பரப்புரை!

இதற்கிடையில் 2015இல் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ச 2018இல் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பொதுமக்கள் முன்னணி என்ற கட்சியின் பெயரில் தேர்தலில் குதித்து விசமத்தனமான தேர்தல் பரப்புரையில் இறங்கியுள்ளார். 'நாட்டைத் துண்டாடுகின்றார்கள்!', 'சமஸ்டி கொடுக்கப் போகிறார்கள்!', 'ஒற்றையாட்சியைக் கைவிட்டுவிட்டார்கள்!', 'தமிழீழம் அமைத்துக் கொடுக்கின்றார்கள்!' என்றெல்லாம் இப்போது கூறித்திரிகின்றார்.

சிறுபான்மையின மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை தவறவிட்டுவிட்டு இப்போது பெரும்பான்மையின மக்களாக விளங்கும் சிங்கள மக்களின் உணர்வுகளை மீண்டும் உசுப்பிவிட்டு அதில் உச்சப்பலன் அடைய விளைந்திருக்கின்றார் மகிந்த. அவரின் இத்தகைய நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பை இனியும் பெறாது என்பதாகவே 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சுட்டிக் காட்டுகின்றது.

### வடக்கில் 726 உறுப்பினர்களுக்கு 6,744 பேர் போட்டி!

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு 726 உறுப்பினர்களைத் தெரிவதற்கு 6,744 பேர் போட்டியிடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன! இவர்கள் 19 அரசியல் கட்சிகளையும் 19 சுயேட்சைக் குழுக்களின் சார்பிலும் போட்டியிடுகின்றார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 402 பேர்களைத் தெரிவுசெய்ய 3,376 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 66 உறுப்பினர்களுக்காக 638 பேர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 மன்றங்களுக்கு 67 உறுப்பினர்களுக்காக 757 பேர்களும், வவுனியாவில் 05 மன்றங்களுக்கு 103 உறுப்பினர்களுக்கு 1,072 பேர்களும் மன்னாரில் 05 மன்றங்களுக்கு 88 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய 904 பேர்களும் போட்டியிடுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இத்தகவலைப் பார்க்கின்றபோது 'கின்னஸ்' தேர்தல் சாதனையாகப் பதியப்படுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுவதாகவே தெரிகின்றது.

### குற்றவாளிகளை நிராகரிக்க வேண்டும்!

நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பு நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக தண்டனைபெற்ற அறுபதுக்கும் மேற்பட்டவர்களை வேட்பாளர்களாகப் பிரதான கட்சிகள் நிறுத்தியுள்ளன எனக் குற்றம் சாட்டியுள்ளது. குற்றஞ்சாட்டியது மட்டுமல்லாது இவர்களின் பெயர்ப்பட்டியலையும் பொலிஸ்மா அதிபரிடம் கையளித்துள்ளது. இவர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களாகவும், இலஞ்சம் பெற்றவர்களாகவும், போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுடனும், பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புள்ளவர்களாகவும் உள்ளனர் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

குற்றவாளிகளை மட்டுமல்ல சமூகத்தோடு எவ்வகையிலும் தொடர்புபடாமல், சமூக வாழ்வில் எவ்வித ஈடுபாடும் காட்டாமல், அரசியலில் ஈடுபட்டுக் கிடைக்கிற சலுகைகளைப் பெறும் நோக்கத்தோடு தேர்தல்களில் போட்டியிடும் பணச்செருக்குக் கொண்ட வேட்பாளர்களை மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும். மேலும், மக்கள் மத்தியில் ஒற்றுமையை, ஒன்றிப்பை உருவாக்காமல் குழப்பங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தும் வேட்பாளர்களை மக்கள் இனம்கண்டு அவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களை அரசியல் நீரோட்டத்தில் இருந்து அகற்றுவது அரசியல் இன்னுமின்னும் அழுக்கடையாமல் இருக்க வழிசெய்யும்!

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

உலகத் திருச்சபைச் செய்திகள்

# செபிக்காத, இறைவனைத் தேடாத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது

மேய்ப்பருக்கு அதிகாரத்தைக் கொடுப்பது அல்லது அதிகாரத்தை அவரில் கட்டியெழுப்புவது செபத்தில் அவர் இறைவனுக்கு மிகநெருக்கமாக இருப்பதிலிருந்து வழங்கப்படுவதாகும் என்று கூறிய திருத்தந்தை, செபிக்காத மற்றும் இறைவனைத் தேடாத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது என்றும் உரைத்தார்.

மேய்ப்பரின் அதிகாரம் இறைவனுக்கும் மக்களுக்கும் நெருக்கமாக இருப்பதிலிருந்து வருகின்றது என்று சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். அதிகாரம் கொண்டவர்போன்று இயேசு போதிப்பதுபற்றிக் கூறும் மாற்கு நற்செய்தி வாசகத்தை (மாற்.1.21-28) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உணர்வு, அருகாமை, சீரான வாழ்வு அகியவை மேய்ப்பர் மற்றும் அவரின் அதிகாரத்தின் மூன்று பண்புகள் என்று கூறினார்.

இயேசுவின் புதிய போதனை இறைதந்தையிடமிருந்து பெற்ற அதிகாரம் எனும் கொடையிலிருந்து வருவது என்றும், மறைநூல் அறிஞர்களும் சட்ட வல்லுனர்களும் உண்மையைக் கூறினாலும் அவர்கள் கூறியது மக்களின் இதயங்களைத் தொடவில்லை என்றும் உரைத்த திருத்தந்தை, இயேசுவின் போதனை மக்கள் மனங்களில் வியப்பை உருவாக்கி அவர்களைத் திகைக்க வைத்தது என்றும் கூறினார்.

இயேசு அதிகாரம் கொண்டிருந்தார். ஏனென்றால் அவர் மக்களின் பிரச்சினைகள் துன்பங்கள் மற்றும் பாவங்களைப் புரிந்துகொண்டவராய் அவர்களுக்கு மிகநெருக்கமாக இருந்தார் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.



அதிகாரம் இறைவனின் கொடை. இது இறைவனிடமிருந்து வருகின்றது என்றும், அதிகாரம் என்பது இரட்டை வாழ்வு அல்ல அது சீரான வாழ்வு என்றும், மேய்ப்பர் அதிகாரத்தை இழந்தால் நம்பிக்கை இழக்க வேண்டாமென்றும், அதனை மீண்டும் உயிர்பெறச்செய்ய எப்போதும் காலம் உள்ளது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

## இரண்டாயிரத்து நூறு வறியோருக்கு 'சேர்க்கஸ் டிக்கட்' அனுப்பிய திருத்தந்தை

"எவ்வளவுக்கு அதிகமாக கிறிஸ்துவில் நம்மைப் பதித்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக தினசரி சவால்கள் மத்தியிலும் உள்மன அமைதியை கண்டுபிடிக்கிறோம்" என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றுள்ளன.

மேலும் ஜனவரி 11ஆம் திகதி உரோம் நகரில் நடைபெற்ற 'சேர்க்கஸ்' விளையாட்டுக் காட்சியைக் கண்டுகளிக்க 2,100 வறியோருக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'டிக்கட்' அனுப்பியதாகத் திருத்தந்தையின் தர்மப் பணிகளை ஒருங்கிணைக்கும் பேராயர் கொனாட் கிறஜவஸ்கி (Konrad Krajewski) அவர்கள் தெரிவித்தார்.

Circus Medrano என்ற நிறுவனத்தினர் நடத்திவரும் இந்த 'சேர்க்கஸ்' காட்சியைக் காணும் வறியோருக்கு இக்காட்சியின் இறுதியில் இரவு உணவும் வழங்கப்பட்டது. சவால்கள் நிறைந்த சூழலில் உடற்பயிற்சி, கலைநயம் என்பவற்றை வெளிப்படுத்தி சேர்க்கஸ் கலைஞர்கள் செய்யும் சாகசங்கள் நமக்குப் பெரும் உந்துசக்தியாக அமைந்தது எனத் திருத்தந்தை தெரிவித்தார்.

## இறையாட்சி என்பது விளம்பரத்தோடு வருவது அல்ல

- திருத்தந்தை -

இறையாட்சி கண்கவர் காட்சியோ, கேளிக்கையோ, விளம்பரமோ அல்ல. நாம் தீட்டும் மேய்ப்புப்பணி திட்டங்களால் உருவாவதில்லை. மாறாக, தூய ஆவியார் அதனை வளர்க்கிறார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய மறையுரையில் கூறினார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில், லூக்கா நற்செய்தி 17ஆம் பிரிவிலிருந்து எடுக்கப்பட்டுள்ள நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி திருத்தந்தை மறையுரை வழங்கினார்.

"இறையாட்சி எப்போது வரும்?" என்று பரிசேயர் கேட்ட கேள்வி திருமுழுக்கு யோவான் உட்படப் பலரது மனதில் எழுந்த கேள்விதான் என்று குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறையாட்சி உங்கள் நடுவே உள்ளது என்பதே இயேசு வழங்கும் பதில் என்பதையும் சுட்டிக்காட்டினார். "இதோ இங்கே, இன்றே இறையாட்சி வந்துள்ளது என்பதை நாசரேத்தூர் தொழுகைக்கூட்டத்தில் அறிவித்தார் இயேசு. இறையாட்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் விதைக்கப்பட்டு வளர்ந்து வருகிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுறையில் எடுத்துரைத்தார்.

"இதோ இங்கே, அதோ அங்கே" என்று சொல்லுமளவு இறையாட்சி வெளி ஆடம்பரங்களோடு, விளம்பரத்தோடு வருவது அல்ல என்பதை வலியுறுத்திக்கூறிய திருத்தந்தை, மறைந்து நிற்கும், அமைதியாக வளரும் இறையாட்சியை நம்புவதற்கு தயாராக இருக்கிறோமா என்ற கேள்வியையும் எழுப்பினார்.

## ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் திருத்தந்தையின் நிகழ்வுகள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தலைமையேற்றுப் பங்கேற்கும் நிகழ்வுகளின் விபரங்களைத் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் வெளியிட்டுள்ளது.

ஜனவரி 15 முதல் 22ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை சிலி மற்றும் பெரு நாடுகளில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வதையடுத்து அந்நாள்களில் காலைத் திருப்பலிகளும், ஜனவரி 17 புதன் மறைக்கல்வி உரையும் இடம்பெறாது.

ஜனவரி 25ஆம் திகதி திருத்தூதர் புனித பவுல் மனமாற்றத் திருவிழாவையும், கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிறைவு நாளையும் முன்னிட்டு உரோம் நகர் மதிலுக்கு வெளியே அமைந்துள்ள புனித பவுல் பசிலிக்காவில் மாலைத் திருப்புகழ் வழிபாட்டை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நடத்துவார்.

Salus Populi Romani அதாவது உரோம் மக்களுக்கு குணம் வழங்கும் அன்னை மரியாவின் உருவப்படம் புனித மேரி மேஜர் பசிலிக்காவில் நிறுவப்பட்ட திருநாளைச் சிறப்பிக்கும் வண்ணம் ஜனவரி 28 ஞாயிறன்று பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றுவார். Salus Populi Romani அன்னை மரியாவின்மீது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனிப்பட்ட பக்தி கொண்டிருப்பதால் தனது திருத்தூதுப் பயணங்களின் முன்னும் பின்னும் அந்த அன்னையைச் சந்திப்பதை அவர் பழக்கமாகக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணமாக்கும் திருநாளையும் அர்ப்பணமாக்கப்பட்ட வாழ்வின் 22ஆவது உலக நாளையும் கொண்டாடும் வகையில் பெப்ரவரி 2ஆம் திகதி புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் திருப்பலியை தலைமையேற்று நடத்துவார். பெப்ரவரி 14ஆம் திகதி திருநீற்றுப் புதனன்று மாலை புனித ஆன்செல்ம் கோவிலிலிருந்து புறப்படும் திருப்பவனியில் கலந்துகொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித சபீனா பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றுவார். பெப்ரவரி 18ஆம் திகதி ஞாயிறு முதல் பெப்ரவரி 23 வெள்ளி வரை திருத்தந்தையும், வத்திக்கான் உயர் அதிகாரிகளும் அரிச்சா என்னுமிடத்தில் அமைந்துள்ள தெய்வீகப் போதகர் இல்லத்தில் தவக்காலத் தியானத்தில் ஈடுபட்டிருப்பர்.

## இளையோரை மையப்படுத்தி உலக ஆயர்களின் 15வது மாமன்றம்

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் உலக ஆயர்களின் 15வது மாமன்றம் வத்திக்கானில் நடைபெற உள்ளது. இவ்வுலக ஆயர்களின் மாமன்றத்தில் இளையோரை மையப்படுத்தி **"இளையோர் நம்பிக்கையும் அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்"** (Young People, the faith, and Vocational discernment) என்ற கருப்பொருளில் இளையோர் வாழ்வை இறைதிட்டத்தை நோக்கி வழிநடத்தும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற உள்ளன.

உலகின் ஆயர் பேரவைகள், கீழை வழிபாட்டுமுறை தலத்திரு அவைகள், துறவு சபைகளின் உலகத் தலைவர்களின் ஒன்றியம் ஆகிய அனைத்தையும் கலந்துபேசி இந்த மையக்கரு தெரிவு செய்யப்பட்டுள்ளது.


## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். - மன்னா நிர்வாகம்.

# புனிதர்களின் பாதையில்

## புனித கான்றர்பரி ஏட்ரியன்

*துறவி - (கி.பி. 1599 - 1621)*




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

"நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்" (யோவா.17:11).

ஏட்ரியன் வட ஆபிரிக்க நாட்டில் 635இல் பிறந்தார். பாசமும் பக்குவமும் சரிசமமாகப் பகிரப்பட்ட குடும்பமாக இருந்தது இவர்களது குடும்பம். தென்றல் வீசிய நாட்டில் காலம் சதிராடியது. இத்தாலி முகமதியர்களின் ஊடுருவலுக்கு இரையாகும் சூழல் உருவானது. எனவே 640 வாக்கில் ஏட்ரியனின் குடும்பம் நேப்பிள்சுக்கு இடம்பெயரும் இடர் உருவானது.

சீரிய ஒழுக்கமும், நேரிய வாழ்க்கையுமாக வாழ்ந்துவந்த ஏட்ரியன் துறவு மடத்தில் சேர்ந்தார். இளம் வயதிலேயே நேப்பிள்ஸில் இருந்த ஆசிர்வாதப்பர் துறவு மடத்தின் தலைமைப் பொறுப்பேற்றார். அரசர் இரண்டாம் கான்ஸ்டன்ஸ் உடன் நல்ல நட்பு நிலவியதால் அவர் வழியாக திருத்தந்தையின் அறிமுகமும் கிடைத்தது. ஏட்ரியனின் இறையனுபவத்தையும், திறமையையும் கண்டுகொண்ட திருத்தந்தை அவரைத் தமது ஆட்சிமன்றத்தின் ஆலோசகராக வைத்துக்கொண்டார்.

664ஆம் ஆண்டு கான்றர்பரிப் பேராயராக இருந்த புனித டெஸ்டெடிட் இறந்தவுடன் அந்த இடத்திற்குத் தகுதியான ஆள் ஏட்ரியன்தான் என்று திருத்தந்தை விட்டாலியன் உணர்ந்தார். ஏட்ரியனின் சம்மதம் கேட்டார். ஆனால் "நான் அதற்குத் ஏட்ரியன் தகுதியானவன் அல்ல" என்று தாழ்ச்சியோடு மறுத்துவிட்டார். மேலும் தார்சுஸ் நகரைச் சேர்ந்த தியோடோரைப் பேராயராகப் பரிந்துரை செய்தார்.

ஏட்ரியனின் பரிந்துரையைத் திருத்தந்தை ஏற்றுக்கொண்டார். மேலும் இங்கிலாந்து செல்லும் தியோடோருடன் சென்று அவருக்கு ஆலோசகராக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். கீழ்ப்படிதலுடன் இதனை ஏற்றுக்கொண்ட ஏட்ரியன் பயணத்திற்கு ஆயத்தமானார். 668ஆம் ஆண்டு இருவரும் தனித்தனியாக உரோமையிலிருந்து கிளம்பினார்கள்.

தியோடோர் திட்டமிட்டபடி இங்கிலாந்து சென்றார். ஆனால் ஏட்ரியன் பிரான்ஸில் தடுத்து நிறுத்தப்பட்டார். பேரரசர் இரண்டாம் கான்ஸ்டன்ஸின் உளவாளி என்ற சந்தேகத்தின்பேரில் சிறைவைக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு சந்தேகத்திற்கான போதிய ஆதாரம் இல்லை என்பதால் விடுதலை ஆனார்.

இங்கிலாந்து வந்து சேர்ந்ததும், இங்கிலாந்தின் திருத்தூதரான புனித அகஸ்டின் (பின்னாளில் புனித ஆஸ்டின் எனப்பட்டவர்) கான்றர்பரியில் ஆரம்பித்த புனித பேதுரு புனித பவுல் துறவு மடத்தின் தலைவராகச் செயற்பட்டார். இத்துறவு மடத்தில் இருந்த பள்ளியில் மிகச்சிறந்த கல்வி வழங்கப்பட்டது. இவரின் கடின உழைப்பால் ஆங்கிலக் கல்வியின் ஆதார சுருதியாக இப்பள்ளி அமைந்தது. இங்கிலாந்தில் பல இடங்களிலும் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்தார். எதிர்வந்த நூற்றாண்டுக்கான புனிதர்கள், திறனாய்வாளர்கள், மறைப்பணியாளர்கள் போன்றோர் இப்பள்ளியில் பயின்று வெளிவந்தார்கள்.

ஏட்ரியனைப்பற்றிக் குறிப்பிடும்போது "தினந்தோறும் மடைதிறந்த வெள்ளம்போல ஞானத்தைப் பொழிந்தவர் ஏட்ரியன்" என்று பீட் (Bede) குறிப்பிட்டுள்ளார். கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழி அறிஞராகவும், விவிலிய விற்பன்னராகவும், நல் நிர்வாகியாகவும் விளங்கிய ஏட்ரியன் ஜனவரி ஒன்பது 710இல் இறைபதம் இணைந்தார்.

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

மன்னார்
மறைமாவட்டத்தின்
அப்போஸ்தலிக்க
பரிபாலகராகக் கடந்த
இரண்டு வருங்களாக
அரும்பணியாற்றிய மேதகு
ஆயர் கிங்ஸ்லி
சுவாம்பிள்ளை
ஆண்டகைக்கான நன்றிப்பா!



## நன்றியுடன் வாழ்த்தி நின்றோம்!

எதிர்பாரா வருத்தமதில் எமதாயர் வீழ்ந்துவிட
ஏதிலியாய் நாமும் ஏங்கித் தவித்திருக்க
முதிர்வயது வந்தாலும் முதிர்ச்சியுடன் பணிசெய்து
மன்னாரின் மக்கள் யாவரையும் நீர்கவர்ந்து
எதிர்காலம் நல்லாய் அமைவதனை நீர்விரும்பி
ஏணிப்படியாய் இருந்து ஏற்றமிகு பணிசெய்த
கதிரொளியாய் மக்கள் இதயமெலாம் நிறைந்து
கருணையுடன் எம்மைக் காத்தவரே வாழ்த்துகின்றோம்!

பணிஓய்வு பெற்றாலும் பரமன்உமைத் தேர்வுசெய்து
பாங்காக மன்னாருக் கழைத்துமே வந்து
பணிவாழ்வில் அப்போஸ்தலிக்க பரிபாலகராய்
சேவை தொடர்ந்திடுக எனப் பணித்த
பணியைச் சிரமேற்தாங்கிப் பண்புடனே எழுந்தருளி
பாங்காகப் பணிப்பொறுப்பை உடனேற்று
துணிவான உளத்தோடு ஆண்டிரண்டாய் ஆர்வமுடன்
பணிசெய்த உத்தமரே பண்பாக வாழ்த்துகின்றோம்!

நெஞ்சம் நிறைவாக நற்சேவைதான் புரிந்து
நலமாக மக்களெல்லாம் நாளும் மகிழ்ந்திருக்க
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை எனும்அன்பு ஆயரேநீர்
கனிவாகச் செய்திட்ட இனிய பணி
வஞ்சமிலா எம்மக்கள் இதயமெலாம் நிறைந்திருக்கும்
வான்மையுடன் நீர்வாழ அன்புடனே வாழ்த்துகின்றோம்
பஞ்சம் படையாவும் பாழ்பாட்டுப்போய் நாமும்
பாசமுடன்வாழ பரமன் அருள் பொலிந்திடுக!

**- அ. அந்தோனிமுத்து,**
**ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், மன்னார்.**

## தைத்திருநாள் மகிழ்வினிலே...!



காளைமாடு முன்செல்ல கலப்பையிலே கரம்பிடித்து
அழகாக வயல்உழுது மணிமணியாய் நெல்விதைத்து
வரப்புயர நீர்ப்பாய்ச்சி செழித்துவரும் வேளையிலே
களையெடுத்து வளரவிட்டு கதிர்முற்றித் தலைவணங்கி
மண்ணினை முத்தமிடும் மகிழ்வான வேளையிலே
மாறாத பெருமிதத்தில் மகிழ்ந்திருப்பான் விவசாயி!


அரிவாள் கையிலெடுத்து கதிரெல்லாம் கத்தரித்து
அடுக்கிவைத்துப் போரடித்து நெல்மணிகள் குவித்துவைத்து
அரிசியாய் அதைமாற்றி வீட்டின் முற்றத்திலே
அழகான கோலமிட்டு புதிய அடுப்பில்வைத்த
புதுப்பானை பொங்கையிலே உள்ளமும் பொங்கிநிற்க
மாறாத பெருமிதத்தில் மகிழ்ந்திருப்பான் விவசாயி!

துணையோடு பிள்ளைகளும் சுற்றிவர அமர்ந்திருக்க
புத்தாடை புனைந்தவராய் புன்னகையில் காட்சிதர
உறவுகள் வருகைதந்து வாழ்த்துக்கள் கூறிநிற்க
சர்க்கரையும் கற்கண்டும் கலந்துசெய்த பொங்கல்தனை
பரிமாறி உண்கையிலே உள்ளலொம் பொங்கநிற்க
மாறாத பெருமிதத்தில் மகிழ்ந்திருப்பான் விவசாயி

தை பிறந்தால் வழிபிறக்கும் வாழ்வின் துன்பம் ஓடிவிடும்
செய்யும் தொழில் எல்லாம் கைகூடிப் பலன்கொடுக்கும்
பஞ்சம் பசிஇல்லாச் சமுதாயம் உருவாக
விவசாய நிலங்களெல்லாம் நல்விளைச்சல் எமக்குத்தர
தைப்பொங்கல் நன்னாளில் நல்லவனாம் இறைவனிடம்
நயமாக வேண்டிடுவோம் நலமாக வாழ்ந்திடுவோம்!

**இ. அ. அமலரட்ணம்**
**200 குருசோ வீதி, யாழ்ப்பாணம்.**

# கொஞ்சம் சிரிங்க



**நிமல்:** நான் தினமும் காலை 9.00 மணிக்கு வேலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் முடியவில்லை.
**கிளறன்:** ஏன் முடியவில்லை?
**நிமல்:** எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை....

..................................

**குமார்:** என்ன சுந்தரம், தலையில் ஏதோ அடிபட்டு ரொம்ப வீங்கியிருக்கு.
**சுந்தரம்:** என்ர மனைவி, "இனிமேல் நான் உங்களுக்கு அடிக்கமாட்டேன்" என்று கையில் இருந்த உலக்கையால் அடித்து சத்தியம் பண்ணினாள்.

..................................

**பேத்தி:** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதுதானே?
**பாட்டி:** ஆமா
**பேத்தி:** அப்ப நீங்க எப்படி வளைஞ்சீங்க?

..................................

மகன் நாயை இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்,
**தந்தை:** "இந்தக் கழுதையோட எங்கே சுத்திவிட்டு வாறா"
**மகன்:** அப்பா! நல்லாப் பாருங்க இது கழுதை இல்ல நாய்.
**தந்தை:** நான் உன்னோட எதுவும் பேசவில்லை, இந்த நாயிடம்தான் பேசினான்.

..................................

**அப்பா:** மகனே ஆறும், ஆறும் சேர்ந்தால் என்ன வரும்?
**மகன்:** இதுகூட தெரியாதா அப்பா வெள்ளம்தான் வரும்.

**விமல்:** நீ ஏன் மீன் சாப்பிடுவதில்லை?
**கமல்:** முள்ளுக் குத்தும் என்பதால்.
**விமல்:** அப்ப செருப்புப் போட்டுக்கொண்டு சாப்பிடு.

..................................

**முருகேசு:** ஒருவன் எருமை மாட்டை அடித்து துன்புறுத்தினான். நான் அதனைக் காப்பாற்றினேன். இதனை எவ்வாறு வர்ணிப்பீர்கள்.
**ரத்னம்:** 'சகோதர பாசம்' என்று.

..................................

**மாமி:** பக்கத்துவீட்டு மருமகளைப் பாரு, தினமும் அவ மாமியாரை நமஸ்காரம் பண்றா.
**மருமகள்:** எனக்கும் ஆசையாகத்தான் இருக்கு. மாமியாரின் படத்தை நமஸ்காரம் பண்ண!!!

..................................

**ராமு:** உங்க பிறந்த நாளன்று என்ன விஷேசம்?
**சோமு:** அன்றுதான் மகாத்மா காந்தி இறந்து போனார்!
**ராமு:** ஓ... ஒரே நாளில் இரண்டு துக்ககரமான விடயங்களா?

..................................

**நோயாளி:** எனக்கு ஞாபக மறதி கூடிக்கிட்டே போகுது... மருந்து ஏதும் இருக்கா டாக்டர்?
**டாக்டர்:** இருக்கு
**நோயாளி:** அப்ப கொடுங்க.
**டாக்டர்:** அதை எங்க வைச்சன் என்று மறந்திற்றனே....!

# மன்னா விளம்பரப் பலகை

எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்? கவலையை விடுங்கள். வாழ்க்கையை முதலில் வாழத் தொடங்குங்கள்.

யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும், மரியாதையும் போய்விடுமே என்று பயந்தபடி இருக்கிறானோ, அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான்.

......................

உங்கள் நம்பிக்கையை பணத்தின்மீது வைக்காதீர்கள், பணத்தை நம்பிக்கையான இடத்தில் வையுங்கள்.

......................

செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் அனைத்தும் செய்ய முடியாதவர்கள் என்று முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவைதான்.

எல்லோரிடமும் அன்பைக் கொடுத்து ஏமாந்துவிடாதே! யாரிடமும் அன்பைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிடாதே!

நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

......................

எதையும் சிந்தித்துச் செய்தால் நமக்குக் கிடைப்பது வெற்றி... எதையும் செய்துவிட்டுச் சிந்தித்தால் நமக்குக் கிடைப்பது அனுபவம்.

......................

நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ, அப்படி நம்மைச் செய்துகொள்வதற்கான ஆற்றலும் நம்மிடம் உள்ளது.

உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாயிரு. உயர்த்திப் பேசும்போது செவிடனாயிரு. வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்.

# முழங்கால் வலி நீங்க மூலிகை மருத்துவம்



- **இஞ்சி :-**
  தினமும் இஞ்சி டீ குடிப்பது முழங்காலுக்கு நல்லது. வீக்கம் மற்றும் மூட்டு வாதத்துக்கும் இது மருந்தாக அமையும்.

- **மஞ்சள் பால் :-**
  இரண்டு கப் பாலில் ஒரு டீஸ்பூன் நொறுக்கிய பாதாம், வால்நட் பவுடர், சிறிது மஞ்சள் தூள் போன்றவற்றைச் சேர்த்துக்கொள்ளவும். இது அளவில் பாதியாகும் வரை காய்ச்சவும். இதை தினமும் குடித்துவர, கால் மூட்டுகள் உறுதியாகும். முழங்கால் வலி குறையும்.

- **பப்பாளி விதை டீ :-**
  சிறிது பப்பாளி விதைகளைப் போதுமான அளவு நீரில் போட்டு, எட்டு முதல் பத்து நிமிடங்கள் கொதிக்கவைக்கவும். பின்னர், இதில் சிறிது டீத்தூளைக் கலந்து மேலும் இரண்டு நிமிடங்களுக்கு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி, இதனுடன் ஒரு டீஸ்பூன் தேன், சிறிது கருமிளகுப் பொடி சேர்த்துக் குடிக்கலாம். ஒரு நாளைக்கு இரண்டு முறை குடித்துவர, முழங்கால் வலி குறையும்.

- **அன்னாசிப்பழம் :-**
  அன்னாசிப்பழத்தை ஜீஸ் ஆக்காமல் அப்படியே சாப்பிட்டுவந்தால், முழங்கால் வலி குறையும்.

- **கரட் :-**
  கரட், முழங்கால் மூட்டுவலிக்கு மிகச்சிறந்த மருந்து, இது சீன மருத்துவ முறைகளில் காலங்காலமாக பயன்படுத்தப்படுவது. இரண்டு கரட்களை சிறு துண்டுகளாக அரிந்து எலுமிச்சைச் சாற்றில் கலந்து குடிக்கலாம்.

- **வெந்தயம் :-**
  இரண்டு டீஸ்பூன் வெந்தயத்தை இரவிலேயே நீரில் ஊறவைத்து விடவேண்டும். காலையில் இந்த நீரைச் சாப்பிட்டுவர, முழங்கால் மூட்டுப் பிரச்சினைகள் குணமாகும். வெந்தயத்தைத் தண்ணீரில் கலந்து பேஸ்ட்போலச் செய்து அதை வலியுள்ள இடத்தில் பூசலாம். நல்ல நிவாரணம் கிடைக்கும்.

- **வெங்காயம் :-**
  வெங்காயத்தில் சல்ஃபர் உள்ளது. இது வலியைக் குறைக்க உதவும். வீக்கம் கட்டிகளுக்கு எதிராகச் செயற்படும். வெங்காயம், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும். உதவும்.

- **தண்ணீர் :-**
  தண்ணீர் நமது உடலுக்கு அத்தியாவசியத் தேவை. இது முழங்கால் வலியைக் குறைக்க உதவும். நமது மூட்டுப் பகுதியில் வழுவழுப்பான உள் உறைப் பகுதி (Lining) இருக்கும். இதை கார்டிலேஜ் (Cartilage) என்கிறோம். தண்ணீர் கார்டிலேஜை மென்மையாக்கும். மூட்டுப் பகுதிகளில் இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, தேவையான சத்துகளை மூட்டுப் பகுதிகளுக்குக் கடத்தும். முழங்கால் மூட்டிலுள்ள நச்சுப்பொருட்களையும் தண்ணீர் வெளியேற்றும்.

# சமையல் குறிப்பு

## *அன்னாசி ஐஸ்கிறீம்*



### தேவையானவை:

கிரீம் - 40 கிராம்
சர்க்கரை - 50 கிராம்
கோழிமுட்டை - 15
அன்னாசிப்பழம் - 1
ஜெலட்டீன் - 8 மேசைக்கரண்டி
பைனாப்பிள் எசன்ஸ் - 1 ரீ ஸ்பூன்
மஞ்சள் கலர் - 1/4 ரீ ஸ்பூன்

### செய்முறை :

முட்டையை உடைத்து வெண்கரு, மஞ்சள் கரு எனப்பிரித்து தனியாக அடித்துக்கொள்ள வேண்டும். மஞ்சள் கருவோடு சர்க்கரையைச் சேர்த்துக் கரைய அடிக்க வேண்டும். அன்னாசியைத் தோல் சீவி, சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். ஜெலட்டீனை சிறிது சர்க்கரை சேர்த்து வெந்நீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். முட்டையின் மஞ்சள் கருவை வெந்நீரில் வைத்து ஆவி வரும்வரை அடிக்கவேண்டும்.

மஞ்சள் கருவோடு ஜெலட்டீனை விட்டுக் கலக்கிக்கொள்ளவும். அன்னாசித் துண்டுகள், எசன்ஸ் உட்பட எல்லாவற்றையும் சேர்த்து கலவையிட்டுக்கொண்டு பிரீஸரில் (கடுங்குளிரில்) கலவையை வைத்துக் கெட்டிப்படுத்த வேண்டும்.



# மனநலம் காப்போம் !

தேன்மொழி நிரோஷன் எழுதும்

சமூக உளவியல் தொடர் - 2

## மனநலம் காக்க வாய்விட்டுச் சிரிப்போம்....!

இன்றைய விரைவான கால ஓட்டத்திலே நெருக்கடி மிகுந்த வாழ்க்கையை எல்லோரும் எந்திரமயமாக்கி, இயந்திரங்களோடு, இயந்திரங்களாகி வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கின்றோம். இந்த வேகமான நகர்வுகள் மனிதனைப் பொருளாதாரத்தில் பதவி மற்றும் புகழின் உச்சிகளுக்குக் கொண்டுசெல்கின்றதேயொழிய மனித மனங்களின் நிலை ஆரோக்கியமானதாக உள்ளதா? அல்லது கவலைக்கிடமாக உள்ளதா? என்பது மிகப்பெரிய வினாவாகவே உள்ளது.



நாம் பொருளாதாரத்தில், ஏனைய பதவியுயர்வுகளில், எமது சுயமரியாதையிலும்கூட உயரத்தான் வேண்டும். இவையெல்லாம் இருப்பினும் எமது மனநலம் ஆரோக்கியமானதாக இல்லாவிடில் இவை இருந்தும் எந்தப்பயனும் இல்லை. எல்லாம் இருந்தும் மகிழ்ச்சி, மனஅமைதி என்பன இல்லாதுவிடின் நடைபிண வாழ்க்கையே மிஞ்சும்.

வாழ்வின் பாதிப்பலமான சந்தோசத்தை இழந்துவிடாது தற்காத்துக்கொள்வதற்கு இன்னுமொரு அருமருந்து ஒன்று உண்டு. இதுகூட அதிகஷ்டப்பட்டு எமது சொத்தை விற்று வாங்கும் மருந்தல்ல! மாறாக எம்மிலே எம்மோடுகூடவே ஓர் உணர்வாக, இயற்கையாகவே இருக்கின்ற மருந்து. அதுதான் எம் ஒவ்வொருவரதும் உதடுகளிலும் பூக்கக்கூடிய ஒரே ஒரு பூ சிரிப்பு! அதையும் வாய்விட்டு சிரித்தால், இன்னும் சிறப்பு!

சிரிப்பு மனித உணர்வின் விசேடமானதொரு வெளிப்பாடாகும். மனிதனோடுகூடவே பிறந்ததொரு உன்னதமான உள வெளிப்பாடாகும். மனிதன் மொழியைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே தொடர்பாடலுக்கென பயன்படுத்திய ஓர் ஊடகம் சிரிப்பு. மனிதரை மனிதரோடு, இழுத்துச் சேர்க்கும் காந்தக்கல் சிரிப்பு என்கிறார் சேப்ட்டஸ்பரி (Shaftesbury) என்னும் மெய்யியலாளர்.

குழந்தை பிறந்து 3 மாதங்களிலே சிரிக்க ஆரம்பிக்கின்றது. ஆய்வுகளின்படி குழந்தைகள் ஒரு நாளைக்கு 200-300 தடவைகள் சிரிக்கின்றார்கள் என்றும் வளர்ந்தவர்கள் ஒரு நாளைக்கு 15 – 20 தடவையே சிரிக்கின்றார்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. வயது அதிகரிக்க அதிகரிக்க எமது சந்தோசம் குறைவடைந்து வருகின்றதை இது சுட்டிக் காட்டுகின்றது. அதுதான் இன்றைய இயந்திர உலகிலே எமக்கு சிரிக்கவும் நேரமில்லை, மற்றவர்களைச் சிரிக்க வைக்கவும் நேரமில்லையே!

### ஏன் சிரிக்க நேரமில்லை?

இயந்திர கதியில் இயங்கும் இன்றைய மனிதர்கள் பலர் சிரிப்பைத் தொலைத்துவிட்டு வாழ்கின்றனர். அதுவும் இல்லாமல் ஒரு நாளைக்கு 200 – 300 தடவைகள் சிரிக்கவேண்டிய எமது குழந்தைகளது சிரிப்புக்களையும் இன்று பெற்றோராகிய நாம் களவாடி விடுகின்றோம். மூன்று வயதானால் உடனே முன்பள்ளி, விளையாட்டுப் பள்ளி என முகிழ்விரியும் முன்னே மூச்சுவிட நேரமில்லாமல் ஆக்குகின்றோம்.

“பக்கத்துவீட்டுப் பிள்ளை ஆங்கிலமொழி மூலத்தில் (English Medium) கல்வி கற்கின்றது, பதினெட்டு வகுப்புகளுக்குப் போகின்றது, என் பிள்ளைக்கு மட்டும் என்ன குறை? நானும் அனுப்புவேன், நானும் படிப்பித்து அப்பிள்ளையை படிப்பில் முந்தவைப்பேன்” எனப் பெற்றோர்கள் தங்களுக்குள் கட்டிக்கொள்ளும் சவால்கள், இன்று சின்னஞ் சிறுசுகளின் சிரிப்பை வலிந்து இழுத்துவிட்டு அழுத்தத்தையும் தேவையற்ற பயத்தையும் பரிசாகக் கொடுத்திருக்கின்றனர்.

ஐந்தாம் ஆண்டு என்றால் வேறாகத் தெரியும். அப்பிஞ்சு முகத்தில் எத்தனை அழுத்தங்கள்! பிள்ளையின் ஆற்றலுக்கும் தாங்குதிறனுக்கு அப்பால் பெற்றோர் நாம் அவர்களை விடாப்பிடியாய் வகுப்புக்கள் என்ற பெயரில் வதைகளுக்கு அனுப்புகின்றோம். நாளை அந்தப் பிள்ளை தன் சிறுவயதில், இழந்த சந்தோசங்களை வளர்ந்தவனாகி எப்பிடியாவது அடைந்துவிட விழைந்து, பல்வேறு பிழையான நடத்தைகளில் ஈடுபடக்கூடும். இதனை உளவியலின் தந்தையான சிக்மண்ட் புரொய்ட், “சிறுவயதில் அடக்கிவைக்கப்பட்ட ஆசைகள் பிற்காலத்தில் பிள்ளைகளிடத்தே பிறழ்வான நடத்தைகளை உருவாக்கும்” என்று தனது உளப்பகுப்பாய்வு கொள்கையில் குறிப்பிடுகின்றார்.

பெரியவர்களாகிய நாங்களும் இன்று எமது சந்தோசங்களை தொலைத்துவிட்டு ஒரு சிரிப்பைக்கூட சிரிப்பதற்கு வழியில்லாத வறியவர்களாகி விட்டோம். பணம் தேடும் அவதியிலே ஒருவர் ஒருவரோடு பேசிச் சிரிக்க, உறவுகளோடு இருந்து குடும்பத்தவர்களோடு இருந்து சந்தோசமான வார்த்தைகளைப்பேசி வாய்விட்டுச் சிரிக்க வாய்ப்பில்லாதவர்கள் ஆகிவிட்டோம்.

“எனக்கென்ன பகிடிவிடவா நேரமிருக்கிறது?” எனப் பலரும் பலரிடம் கேட்டு செல்கின்றோம். ஆனால் பல மணி நேரம் வாயில்லா ஊடகங்களோடு உறவாடி வாயைவிட்டு வெளிவராத சிரிப்பினை வாய்க்குள்ளே சிரித்தும் தொலைக்கிறோம்.

எம்மில் சிலர் இப்போது நாகரீகம் என்ற பெயரில் தமது உணர்வுகளை கட்டுப்படுத்தப் பழகிவிட்டோம். நமக்கு தெரிந்தவர்களைக்கண்டால் சிறு புன்னகைகூட சிந்தாமல் சிலையாகிப் போகின்றோம்.

தப்பித்தவறிச் சிரித்துவிட்டால் நம்மைக் குறைவாக மதிப்பிட்டு விடுவார்களோ அல்லது நம்மைவைத்து ஏதும் காரியம் சாதித்து விடுவார்களோ என்றெண்ணி கடினமான முகம்கொண்ட முகமூடிகளை அணிந்துகொண்டு திரிகின்றோம். இன்னும் சிலர் சிரிப்பு வந்தால்கூட சிரிக்காத மானஸ்தர்களும் உள்ளர். மற்றவர்கள் தம்மைக்கண்டு பயப்பட வேண்டும், அல்லது சிரிக்காமல் சென்றால்தான் தன்னை பெரியவராகக் காட்டிக்கொள்ளலாம் என்றோ நினைக்கவும்கூடும். இன்று எமது குடும்பங்களை எடுத்துக்கொண்டால் நம்மில் எத்தனை பேர் குடும்பத்தினருடன் சேர்ந்து நகைச்சுவை உணர்வுடன் உரையாடுகின்றோம்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையைப் பார்த்தபடி ஏதோ இன்னொரு நாட்டுடன் போர்தொடுக்கத் திட்டமிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்திருப்பதுபோல சிந்தனையின் சிற்பிகளாகி விடுகின்றோம். வீணான விடயங்களில் மனதைச் செலுத்தி மகிழ்வாக இருக்க வேண்டிய அந்தப் பொன்னான மணித்துளிகளை மண்ணாக்கி விடுகின்றோம். இழந்த அந்த விலைமதிப்பற்ற நேரங்களை தலை கீழாய் நின்றாலும் திரும்பப் பெறமுடியுமா? மனிதன் சிரிக்ககூடிய நிலையில் இருக்கும் மட்டும் அவன் ஏழையாக மாட்டான். சிரிப்பை இழந்துவிட்டால் கோடீஸ்வரன் என்றாலும் அவன் ஏழைதான்.

### ஆய்வுகளில் .... சிரிப்பு பற்றிய உண்மைகள்

“வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்” என்று எம் முன்னோர் கூறியது அவ்வளவு மேலோட்டமான விடயம் இல்லை. மாறாக அதை இன்றைய நவீன யுகத்தின் ஆய்வுகள் நூறு வீதம் உண்மை என நிருபித்திருக்கின்றன. அதன்படி சிரிப்பதால், சிரிக்கவைப்பதால் எம் உடலுக்கு என்னென்ன நன்மைகள் உண்டென நோக்குமிடத்து மருத்துவ ஆய்வுகளின்படி:

- நாம் சிரிக்கும்போது எமது உடலின் முன்னூறு வகையான தசைகள் அசைகின்றனவாம். அதிகமாகச் சிரிக்கும்போது முகத்தசைகளுக்கும் பயிற்சி கிடைக்கிறது. இதனால் முகத்தின் அழகும் அதிகரிக்கின்றதாம் (பெண்களே இனி பேஷியல் தேவையில்லை சிரிப்பே போதும்!)
- எபின்பிறின், நோறேபின்பிறின் (Ephinphrine, Norephinphrine) போன்றவை எமக்கு மன அழுத்தம்வரக் காரணமான ஹொர்மோன்களாகும். ஆனால் வாய்விட்டுச் சிரிக்கும்போது இதன் சுரப்புக் குறைவடைந்து மூளையில் Endorphin என்னும் ஒருவகை நரம்புகடத்தியானது சுரக்கின்றது. அது எமது மன நிலையை உற்சாகமாக வைத்திருக்கச் செய்கிறது.
- உயர் குருதி அமுக்கத்தால் ஏற்படும் மாரடைப்பைக் காட்டிலும் மகிழ்ச்சிக் குறைவால் ஏற்படும் மாரடைப்பே அதிகம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே சிரித்து மகிழ்ச்சியாக இருக்கும்போது உடற்கலங்கள் நன்றாகச் செயற்பட ஆரம்பிக்கின்றன. எனவே மாரடைப்பை தள்ளிப்போடும் விலையில்ல மருந்து சிரிப்பே ....!
- வாய்விட்டுச் சிரிப்பது வயிற்றுத் தசைகளுக்கும் ஓர் பயிற்சியாகும். வயிறு குலுங்கச் சிரித்தல் என்று நாம் கூறும் சிரிப்பானது எமது வயிற்றுப் பகுதியிலுள்ள தேவையற்ற கொழுப்புக்களை குறைக்கின்றதாம். (தொப்பை வைத்து விட்டதா? கவலையே வேண்டாம். வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிங்க சிரிங்க சிரிச்சுகிட்டே இருங்க...)
- சிரிக்கும்போது ஒட்சிசனை அதிகம் சுவாசிக்கும் தன்மையை நுரையீரல் பெறுகின்றது. ஒட்சிசன் நிறைவாகக் கிடைக்கும்போது இரத்த ஓட்டம் நன்றாக இருக்கும். இதனால் எல்லா உறுப்புகளுக்கும் இரத்தம் சென்று உடல் ஆரோக்கியம் மேம்படுகின்றது.
- சிரிக்கும்போது உடலின் சமிபாட்டுக்கான நீர் சுரக்கின்றது. ஆகவே சிரிப்பதனால் உணவு இலகுவாக சமிபாடடையவும் முடிகின்றது.

விஞ்ஞான ரீதியாக மனிதர்களை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் விளைவாகப் பெறப்பட்ட முடிவுகளே இவை. எனவே இனியும் முகத்தில் கடினம் இறுக்கம்கொண்ட முகத்திரைகள் வேண்டவே வேண்டாம். மகிழ்வாகச் சிரித்த முகம் கொண்டவர்களாக இருக்கப் பழகுவோம். ஒருவன் தனது சிரிப்பை இழக்கும்போதே அவன் இறக்க ஆரம்பித்துவிடுகிறான் என்றும் கூறலாம். ஆதலால் சிரிப்பீர்... சிரிக்க வைப்பீர்...

### கொஞ்சம் நகைச்சுவை உணர்வுடனும் பேசலாமே..........

எமது பேச்சில் எமது செயற்பாடுகளில் கொஞ்சம் நகைச்சுவை உணர்வும் கலந்திருந்தால் அது எம்மையும் எம்மைச்சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும். கொஞ்சம் நகைச்சுவை உணர்வுடன் மற்றவர்களுடன் உரையாடுபவர்கள் அதிகம் மற்றவர்களால் இலகுவாகக் கவரப்படுவார்கள்.

ஆனால் எடுத்ததற்கெல்லாம் பகிடிவிட்டால் பொல்லுக்கொடுத்து அடிவாங்கின கதையாகிவிடும். அளவான நகைச்சுவையுடன் கூடிய உரையாடல் ஆரோக்கியமான உறவுகளைப் பேண உதவும். கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் உறவிலும் கூட இந்த நகைச்சுவை உணர்வு ஆங்காங்கே இருந்தால் குடும்பவாழ்வு மிக சுவாரசியமானதாய் அமையும்!

நகைச்சுவை உணர்வு ஒருவருடைய சிறப்பான ஆளுமையை எடுத்துக்காட்டுவதாகவும் இருக்கிறது. “நகைச்சுவை உணர்வு எனக்கு இல்லாதிருந்திருந்தால் நான் நீண்ட நாட்களுக்கு முன்பே தற்கொலை செய்திருப்பேன்” என அகிம்சையின் அடையாளம் மகாத்மா காந்தி குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் தனது வாழ்வில் பல மோசமான அனுபவங்களான காதல் தோல்வி, கல்வியில் தோல்வி, பிரிந்த பெற்றோர், அரசியல்சார் இடர்பாடுகளை கொண்டிருத்தவரும், மௌன மொழியாலே உலகைத் தனது பக்கம் இழுத்துப் போட்டவருமான நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் தனது இந்த மோசமான நிலைமைகளை நாசமாக்கப் பயன்படுத்திய ஒரு முக்கிய ஆயுதம் சிரிப்பு. திரையிலே தானும் சிரித்து, உலக மக்களையும் சிரிக்கவைத்த மாபெரும் கலைஞன். எத்தனை துன்பங்கள் தனக்கு இருந்தாலும் அதை மற்றவர் முன்னிலையில் வெளிக்காட்டாது, மற்றவர்கள் பார்வையில் ஓர் நகைச்சுவை நடிகனாக மட்டுமே வலம் வந்தவர். இவர் தனது சிரிப்புகளாலே எல்லோரையும் சிந்திக்கவைத்தார். “எனக்கு நிறையப் பிரச்சினைகள் உண்டு. ஆனால் என்னுடைய உதடுகள் அவற்றை ஒருபோதும் அறியாது. அவை எப்போதுமே சிரிக்கும்” என்றார் அம்மாமனிதர். “சிரிப்பு இல்லாத ஒரு நாள் எனக்கு வீணாகப்போன நாளே” என்றும் சிரிப்பின் சிறப்பை உலகறியச் செய்தார்.

### உலக நாடுகளில் சிரிப்பின் முக்கியத்துவம்

இன்றைய வேகமான உலக நகர்வில் இயற்கையான சிரிப்பைத் தொலைத்துவிட்டு செயற்கையாக அதனை மீண்டும் கொண்டுவர முயற்சிகள் நடக்கின்றது. சிரிப்பு என்பது ஒரு சிறப்பான கொடை என்பதை உலக மாந்தருக்கு நினைவுறுத்தும் வகையில் சிரிப்புக்கென ஒரு தினமாக ‘சிரிப்பு தினம்’ கொண்டாடப்படுகின்றது. அதாவது வருடாந்தம் மே மாதம் முதலாவது ஞாயிற்றுக் கிழமை இத்தினம் நினைவுகூரப்படுகிறது. சிரிப்பின் வாயிலாக உலகில் அமைதியைக் கொண்டுவரும் நோக்குடன் இது 1998ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் மதன் கட்டாரியா (Dr. Madan Katariya) என்பவரால் உருவாக்கப்பட்டது. மேலும் உலகளாவிய ரீதியில் அறுபத்தைந்து நாடுகளில் சுமார் ஆறாயிரம் சிரிப்பு மன்றங்கள் இயங்கிவருகின்றது. மேலும் மேற்குலக நாடுகளில் உடற்பயிற்சி நிலையங்கள் போன்று சிரிப்புக்கென நிலையங்கள் அமைக்கப்பட்டு சிரிப்புப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. அழிந்துபோகும் மகிழ்ச்சியை மீள அழைக்கும் வகையிலான முயற்சிகளே இவை.

### சிரிப்பு ....இதன் சிறப்பை சீர்தூக்கி பார்ப்பதே நம் பொறுப்பு

1956இல் வெளிவந்த ராஜா ராணி என்ற திரைப்படத்தின் சிறப்பான பாடல் வரிகள் இவை. “சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே” போன்ற பழைய பாடல் வரிகள் சிரிப்பின் முக்கியத்துவத்தைச் சிந்திக்க வைக்கின்றன. சிரித்தால் உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும். அழுதால் நீங்கள் மட்டுமே அழுவீர்கள். இதுவே சிரிப்பின் தத்துவம். சிரிக்கும்போது பிறக்கும் உள அமைதியானது உயிரினங்களில் இயல்பாகவே உறைந்திருக்கும் சண்டையிடும் உணர்வைத் தளரவைக்கின்றது என்கிறார்கள். இதனால்தான் சிரிப்பு இறுக்கமான இதயத்தின் திறவுகோலாகவும், சிநேகத்தின் முதல் தூதுவராகவும், மகிழ்ச்சியின் பகிரங்க அடையாளமாகவும், கோபத்தீயை அணைக்கும் நெருப்பாகவும் இருக்கிறது என்றும் கூறலாம்.

“மனிதனுடைய இதயத்தைத் திறப்பது எது? அவனை அறியாமல் எழும் சிரிப்புதான்” என்கிறார் கார்லைல் என்பவர். சிரித்து கல கலவென இருப்பவர்கள் தங்களைச்சுற்றி பலபேரை சேர்த்துக்கொள்வார்கள். தங்களைச்சுற்றி இருப்பவர்களை சோகத்தில் சோர்ந்துவிட அனுமதியார்கள். அவர்கள் வாழும் இடம், பணிபுரியும் இடம், செல்லும் இடம், எல்லாவற்றையுமே மகிழ்ச்சியான சூழலாகவே மாற்றி அமைப்பார்கள்.

“இவனோ(ளோ)டு சேர்ந்தால் பொழுதைச் சந்தோசமாகக் கழிக்கலாம், கவலையை மறக்கலாம்” என்று உணரும் அளவுக்குக்கூட சிலர் வாழ்ந்து வருகின்றனர். “அகத்தின் அழகு முகத்திற் தெரியும்” என்பது பொன்மொழி. அதிலும் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு.

எம் மனம் மகிழ்வாக, சமாதானமாக இருந்தால் அந்த உளஅமைதி அதன் வெளிப்பாடு எம் முகத்திலும் பிரகாசிக்கும். மாறாக உலக மகா கவலைகளையும், சோகங்களையும், நிறைவேறா எதிர்பார்ப்புக்களையும், தேவையற்ற கோபங்களையும் கொண்டு மன இறுக்கத்துடன் வாழ்ந்தால் அதன் பிரதிபலிப்பு அழகற்ற, வி(வ)டிவில்லாத, சுருங்கிப்போன முகங்களே. கவலை கவலைப்படுபவனையே அழித்துவிடும். ஆனால் ஒருவனின் சிரிப்பு சுற்றி இருப்பவர்களையும் மகிழ்வடையச் செய்யும். எனவே புன்னகையை எம் முகத்திலும் உதட்டிலும் தவழவிடுவோம். நாமும் சிரித்து பிறரையும் சிரிக்கவைத்து உடல் நலத்தோடு உள நலமும் மேலோங்கி வாழ சிரிப்போடு சிறப்புடன் வாழ முயற்சிப்போம். (மனநலம் தொடரும்)

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.186

யூதா, திருவெளிப்பாடு

உங்கள் விடைகளை பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | ❖ | 02 | | | ❖ | | 03 |
| | ❖ | 04 | ❖ | | 05 | | ❖ | | |
| | | 06 | ❖ | ❖ | | | ❖ | 07 | |
| | 08 | | ❖ | 09 | ❖ | 10 | ❖ | 11 | |
| | | 12 | ❖ | | ❖ | ❖ | ❖ | 13 | |
| 14 | | | ❖ | | 15 | | ❖ | | 16 |
| | | | ❖ | | 17 | ❖ | ❖ | ❖ | |
| | 18 | | ❖ | 19 | ❖ | 20 | ❖ | 21 | |
| 22 | | 23 | ❖ | ❖ | ❖ | | ❖ | ❖ | |
| | | 24 | ❖ | 25 | | | ❖ | | 26 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(--- என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. ....................... சென்ற வழியில் சென்றார்கள்.
2. அழிவு வராது என்பது ....................
8. அவற்றின் ............... கள் ---- அளிக்கக்கூடியவை.
11. ................ காணப்பட்டது.
13. .................யில் தள்ளவிருக்கின்றது.
14. ................. அடையாளங்கள் மிகுதியாய் உள்ளன.
15. வானத்தை அடைத்து ............. அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
21. .....................க் கணக்கான ----- கேட்டேன்.
23. ஆடையின்றி வெட்கிநிற்கும் ................... நிலையை ----- வழங்குகிறேன்.
25. .............. முழுவதும் இரத்தம்போல் சிவந்தது.

### வலமிருந்து இடம்

3. தமது ................. வாயிலாக ---- விடுவித்தார்.
5. ................... ஒருபோதும் துயறுறேன்.
6. அவள் ....................... மாற வாய்ப்புக் கொடுத்தேன்.
12. அவர்முன் ............... கொண்டிருந்தது. (இடம் மாறியுள்ளது)
15. ஒரு ...................... இருந்தது.
16. சிங்கங்களின் ...................... கள் போன்று இருந்தன.
17. இவர்களுக்கு ......................... வையே விளைவிக்கும்.
23. ................... நாலில் ---- உடன் பணியாளனே.
24. மனிதர் .................. வெப்பத்தால் எரிக்கப்பட்டனர்.
26. ..................... மழையும் உண்டாயின.

### மேலிருந்து கீழ்

1. நான் ......................... குறைகள் சில உண்டு.
2. ......................... காலடியில் விழுந்து பணியச் செய்வேன்.
3. .................. பகர்ந்ததற்காக ---- கண்டேன்.
5. அல்பாவும் ஓமேகாவும் .........................
6. .................... களும் காணப்படவில்லை.
8. ......................... க்காலத்தில் தோன்றுவர்.
9. ................ ஊதுவோர், எக்காளம் முழக்குவோர்.
11. என்னிடம் மீண்டும் ..................., கடலின்மீதும் --- வாங்கிக்கொள்.
12. இத்துணை ................ ஒடுக்கம் ஏற்படத்தேவையில்லை (லகரம் மாறியுள்ளது)
13. அதன் ............. யை வணங்கி --- ஏமாற்றியவன் அவனே.
14. ......................... க்கும் அவ்வாறே ஆயிற்று.
16. நின்று ................. க் கொண்டிருக்கிறேன்.
20. ................... அளிக்கும் தண்ணீர் --- காட்டிகள்
22. ................... ---- கடலில் ஊற்றினார்.

### கீழிருந்து மேல்

4. ஓர் ......................... குழந்தையை அவர் பெற்றெடுத்தார். (னகரம் மாறியுள்ளது)
7. பெரிய ...................... க்குழியில் அவற்றைப் போட்டார்.
8. ........................... இரவே இராது (னகரம் மாற்றம்)
10. அவ்விலங்கிற்கு ..................... வழங்கப்பட்டது.
12. உன் ......................... யைப் பிறர் --- வழங்குகிறேன்.
14. ............................ம் --- உரியன
18. ......................... அவருடைய காலடியிலிருந்து
19. ........................ செய்யும் கை வினைஞர்
23. மண்ணுலகில் வாழ்வோரைச் சோதிக்க ................. அனைத்தின்மீதும் ------ காப்பாற்றுவேன்.
26. வாழ்வைக் ...................... எழுப்புங்கள்

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 184 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
R. அருணா,
உயிலங்குளம், மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
அ. தர்சிகா,
எமில்நகர், மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
E. சுலைக்ஷனா,
செட்டிகுளம், வவுனியா.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
rhpahd tpilfis vOjpNahh; 67 Ngh;

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 184ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. சி. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
02. ச. மரிய கொன்சிக்கா குரூஸ், சவேரியார்புரம், சிலாவத்துறை
03. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.
04. கெ. சுவீற்ஷன் சுமீத், பொன்தீவுகண்டல், முருங்கன்.
05. சி. அனுஷா, தட்சனாமருதமடு, பாலம்பிட்டி.
06. எ. தருண் பீரிஸ், பொன்தீவுகண்டல், முருங்கன்.
07. ற. அனுஷா, ஜோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.
08. K. டொறிஸ் மீனா, அன்னைவேளாங்கன்னி, நாச்சிக்குடா.
09. யே. கமிஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
10. நிக்கி சேவியர், பெற்றா, மன்னார்.
11. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
12. யோசப் சந்தோஸ், எழுத்தூர், மன்னார்.
13. S. A. டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
14. வயலற் யோண், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
15. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
16. அ. கிரியோன், சுகந்தபுரி, வங்காலை.
17. J. இமல்டா வினோதினி, கல்பிட்டி றோட், மாம்புரி.
18. J. E. ஜோனிக்கா, குழந்தையேசு வீதி, மாம்புரி.
19. A. விபுஷிகன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
20. யே. ஜெலின்ரன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
21. பிளேயின் கிறிஸ்தோப்பர், பெற்றா, மன்னார்.
22. ய. றோசலீனா, புதுக்கமம், உயிலங்குளம்.
23. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
24. ஜெ. சுஜித்தா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
25. A. A. அபிநிஷா, கொக்குப்படையான், சிலாபத்துறை.
26. நி. பிரியா, யோசவ்வாஸ் வீதி, செட்டிகுளம்.
27. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
28. அ. டெல்சியா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
29. ஐடா றெபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
30. க. மேரி டிலைக்ஷா, பள்ளக்கமம், முருங்கன்.
31. S. பேர்ஜினி, எழுத்தூர், மன்னார்.
32. ப. மேரி சிறோஜன் பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
33. N. சுலைக்ஷனா குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
34. ம. நிவேதா, மருதங்குளம், உயிலங்குளம்.
35. M. லதா, மன்னார்.
36. M. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
37. A. ருஷாந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
38. மேரி சஞ்ஜனா பிகிறாடோ, பொன்தீவுகண்டல், முருங்கன்.
39. செ. செபமாலை மார்க், வங்காலை.
40. N. டேனியல், யோசவ்வாஸ் வீதி, செட்டிகுளம்.
41. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
42. N. சுலைக்ஷனா குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
43. யோ. ஆன் நிருஜன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
44. அ. அபிஷேக் கொக்குப்படையான், சிலாவத்துறை.
45. A. A. ஆக்காஷ், கொக்குப்படையான், சிலாவத்துறை.
46. அ. மேரி றொக்சன், புதுக்கமம், உயிலங்குளம்.
47. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
48. ஜெ. தனுஷிக்கா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
49. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
50. S. M. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.

## புதிய மன்னார் ஆயருக்கு மகத்தான ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

பின்னர் புதிய ஆயர் உட்பட அனைத்து ஆயர்கள் குருக்கள் பேராலயத்தின் 'இயேசுவே ஆண்டவர்' மண்டபத்திற்குச் சென்று அங்கு திருப்பலிக்குரிய ஆடையை அணிந்துகொண்டனர். தொடர்ந்து பேராலய மண்டபத்திலிருந்து வீதி வழியாகப் பவனியாக வந்த இவர்களைத் தமிழ்ப் பண்பாட்டு முறைப்படி கலையருவி சிறுமியர் நடனமாடி வரவேற்று பேராலய வாசல்வரை அழைத்துவந்தனர்.

பேராலய வாசலில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் திருச்சிலுவையை புதிய ஆயருக்கு வழங்க புதிய ஆயர் அதனை முத்திசெய்தார். தொடர்ந்து பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு. பெப்பி சோசை அடிகளார் ஆசிநீர் குவளையை புதிய ஆயருக்கு வழங்க புதிய ஆயர் அதனைப் பெற்று தானும் ஆசிநீரைப் பூசிக்கொண்டு சூழ நிற்கின்றவர்களுக்கும் ஆசிநீரைத் தெளித்தார். பின்னர் வருகைப்பாடலுடன் குருக்கள் ஆயர்கள் புடைசூழ புதிய ஆயர் பீடம் நோக்கிப் பவனியாகச் சென்றார்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருப்பலியை ஆரம்பித்தார். திருப்பலியின் வாழ்த்துரைக்குப் பின்னர் புதிய ஆயரின் நியமனம் தொடர்பான திருத்தந்தையின் மடல் (Papal Bull) திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மேதகு நியூஜன் வன் ரொட் ஆண்டகை அவர்களினால் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து அதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பும் வாசிக்கப்பட்டது. திருத்தந்தையின் நியமன மடல் வாசிக்கப்பட்டவுடன் இந்தப் புதிய நியமனத்தை வரவேற்பதன் அடையாளமாக அனைவரும் கரவொலி எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தைப் புதிய ஆயருக்குக் கையளிப்பதன் அடையாளமாக அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பேராலயத் திறப்பை புதிய ஆயருக்குக் கையளித்தார். தொடர்ந்து பேராலய நற்கருணைப் பேழையின் திறப்பை பேராலயப் பங்குத்தந்தை புதிய ஆயருக்குக் கையளித்தார்.

பின்னர் ஆயருக்குரிய ஆட்சியதிகாரங்களைக் குறிக்கும் செங்கோலை அப்போஸ்தலிக்க பரிபாலகர் புதிய ஆயருக்கு வழங்கினார். தொடர்ந்து அப்போஸ்தலிக்க பரிபாலகரும், கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களும் புதிய ஆயரை அழைத்துச்சென்று மறைமாவட்ட ஆயருக்குரிய பேராலயத்தின் அதிகாரபூர்வ இருக்கையில் அமர்த்தினர். பின்னர் மன்னார் மறைமாவட்டக் குருக்களும், மன்னார் மறைமாவட்டத்தில் பணி செய்யும் குருக்களும் வரிசையாக வந்து புதிய ஆயரின் மோதிரத்தை முத்தமிட்டு தமது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் கீழ்ப்படிவையும் தெரிவித்தனர். தொடர்ந்து குருக்கள் புதிய ஆயரைச் சூழ்ந்துநின்ற நிலையில் தமக்கு வணக்கமும் கீழ்ப்படிவும் வழங்குதற்கான உறுதிமொழியை புதிய ஆயர் குருக்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். தொடர்ந்து துறவற சபைகளின் தலைவர்கள், பிரதான திருச்சபைகளின் தலைவர்கள், மன்னார் மறைமாவட்டத்தின் பொதுநிலைப் பிரதிநிதிகள் போன்றோர் புதிய ஆயருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். தொடர்ந்து உன்னதங்களிலே கீதத்துடன் புதிய ஆயரின் தலைமையில் திருப்பலி தொடர்ந்து இடம்பெற்றது.

பேராலயத்தில் நடைபெற்ற திருவழிபாடுகளில் பங்கேற்ற எல்லோரும் பேராலயத்திற்குள் உள்வாங்கப்படமுடியாத நிலையில் பேராலயத்திற்கு வெளியே பிரமாண்டமான பந்தல்கள் அமைக்கப்பட்டு உள்ளே நடைபெறும் திருவழிபாடுகளை பந்தல்களுக்குள் இருந்து காண்திரையில் காண்பதற்கு ஏற்ற வகையில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

கொழும்பில் இருந்து ஐ.ரி.என். எனப்படும் தேசிய தொலைக்காட்சி சேவை உட்பட பல தொலைக்காட்சி நிறுவனங்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள் இந்நிகழ்வு பற்றிய செய்திகளை வழங்க மன்னாருக்கு வருகை தந்திருந்தனர். கொழும்பு உயர் மறைமாவட்ட தொலைக்காட்சிச் சேவையான 'வேர்பம்' தொலைக்காட்சி இந்நிகழ்வுகளை நேரடி ஒளிப்பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைவிட மன்னார் மறைமாவட்டத்தின் செய்தி இணையத்தளமான 'அருட்கடல்' இணையத்தளப் பிரிவினர் இந்நிகழ்வுகளை முகநூலின் ஊடாக நேரடி ஒளிப்பதிவு செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பிராந்திய மற்றும் உள்ளூர் செய்தியாளர்களும் மன்னாருக்கு வருகைதந்திருந்தனர். இடநெருக்கடி காரணமாக பேராலயத்திற்குள் நடைபெறும் வழிபாடுகளுக்கு குறிப்பிட்ட ஊடகவியலாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

புதிய ஆயர் பணிப்பொறுப்பு ஏற்கும் நிகழ்வு நிறைவடைந்தபின்னர் மதிய விருந்துக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரர்கள் மற்றும் சிறப்பு அழைப்புப் பெற்றவர்களுக்கு மன்னார் ஆயர் இல்லத்திலும், அருட்சகோதரிகளுக்கு மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லத்திலும், ஏனைய பிரமுகர்கள் மற்றும் பங்குப் பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டு வருகைதந்தோருக்கும் ஏனைய அழைப்பாளர்களுக்கும் மன்னார் குடும்பப்பணி நிலையத்திலும் மதிய விருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதிய ஆயரை வரவேற்கும் முகமாக மன்னார் வவுனியா வீதியிலும், மன்னார் நகரத்தின் பல்வேறு இடங்களிலும் வரவேற்புச் சிகரங்கள் மற்றும் பதாதைகள் வைக்கப்பட்டிருந்தன. மஞ்சள் மற்றும் வெண்ணிறக் கொடிகள் மன்னார் நகரில் பறக்கவிடப்பட்டிருந்தன. புதிய ஆயரை அழைத்துவரும் புனித செபஸ்தியார் பேராலய வீதி அலங்கரிக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் மன்னார் நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

முருங்கனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம்' (Union of Christian Churches of Mannar) மற்றும் வவுனியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'வவுனியா கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம்' (Union of Christian Churches of Vavuniya) ஆகிய அமைப்புக்கள் இந்த வாரத்திற்கான ஒன்றிப்பு செபவழிபாடுகளை ஒழுங்குசெய்துள்ளன.

மன்னார் மறைமாவட்ட பல்சமய மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் இந்த நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுகின்றார். "தந்தாய், அவர்கள் ஒன்றாய் இருப்பார்களாக!" என்ற இயேசுவின் செபம் யதார்த்தமாகிட செபிப்போம்!

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**

கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 05 1955 — உதிர்வு 13 01 2017

### திரு. பிலிப்பு யேசுராசா (துரைசிங்கம்)
(மாவிலங்கேணி, முருங்கன்)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா. 115:6)**

நீங்காத உங்கள் நினைவோடு
நீண்டு செல்கிறது எங்கள் வாழ்க்கைப் பாதை!
பிரிவுதரும் துயரோடு கழிந்து விட்டது ஓராண்டு!
ஆயினும் எங்களோடு நீங்கள் வாழ்கின்றீர்கள்.
எங்களைத் தூக்கிச் சுமந்தஉங்கள் கைகளுக்கு
எங்கள் துக்கம் தணித்த உங்கள் சொற்களுக்கு
எங்கள் பிள்ளைகளைத் தூங்க வைத்த
உங்கள் பாடல்களுக்கு
நன்றி சொல்கிறோம் தந்தையே!
உங்கள் ஆன்மா இறை யேசுவோடு
இணைந்திருக்க மன்றாடி நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## 1ஆம் ஆண்டு, 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி




சவிரி சூசைநாயகம் — சூ. நிக்ஷன் பிரகாஷ்
(மாவிலங்கேணி, முருங்கன்)

மலர்வு : 10 - 05 - 1927 — மலர்வு : 14 - 01 - 1975
உதிர்வு : 29 - 01 - 2017 — உதிர்வு : 23 - 01 - 2000

**அப்பா,** வருடம் ஒன்றாகியும் மறப்போமா உம் நினைவுகளை? வீறுநடை போட்டு உலாவி வந்த நாட்களை மறப்போமா? அழகிய தமிழில் அரங்கத்தில் நீங்கள் ஆற்றிய உரைகளை மறப்போமா? இசையும் நடிப்பும் உங்களின் கலை ஐயா. பிணக்குகள் தீர்ப்பதில் வல்லவர் நீங்கள் ஐயா. உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

..................................

**தம்பி,** நாட்டின் விடுதலைக்காய் தன்னுயிர் நீத்த தியாகியே, எம் அன்புச் சகோதரனே! நீ எம்மைப் பிரிந்து 18 ஆண்டுகள் பறந்துபோனாலும் உன் நினைவுகள் என்றும் எம்மோடு இருக்கின்றன. உன் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகிறோம்.

*உம் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்*

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 21 02 1907 — உதிர்வு 31 12 1987

### திரு. J.R. பயஸ் பிலிப்பு பிள்ளை (J.P)
(முன்னாள் பட்டின சபைத் தலைவர்)
(கொன்வென்ற் வீதி, மன்னார்)

பொங்கும்புன் முறுவலினால் எம்மைக் கவர்ந்தவரே!
பார்புகழ் வாழ்ந்திறைவன் திருவடியை அடைந்தவரே!
மங்காப்புகழுடனே மாநிலத்தில் பணிபுரிந்து
மாந்தரில் மாணிக்க மாகத் திகழ்ந்தவரே!
நெஞ்சம் உருகுதையா நின்பிரிவை நினைக்கையிலே!
ஆண்டு முப்பதானாலும் மறக்க முடியவில்லை!
தஞ்சம் நிரெனவே இறைவனுடன் நீர்வாழ்ந்த
இனியசெயல் நினைந்து பாகாய் உருகிநின்றோம்!
துஞ்சும் பொழுதினிலும் கண்முன்னே வந்துநிற்பீர்!
துணிவான நற்செயலால் பூரித்து நாம்மகிழ்ந்தோம்!
கெஞ்சிநாம் வேண்டுகின்றோம் இறைவன் திருவடியை!
கணபோன்ற உம்மைஅவர் திருப்பாதம் இணைத்திடவே.

**பிரிவால் நினைந்துருகும்,**
மகன் கசியன் பிலிப்புபிள்ளை, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## அதிர்வுகள் ...... 10ஆம் பக்கத் தொடர்ச்சி

### கிடைத்த பெருவெற்றிகள் இனியும் கிடைக்குமா!

கூடியிருந்த அல்லது கூடியிருந்திருக்க வேண்டிய கட்சிகள் பிளவுபட்ட ஒரு சூழலிலும் கூட்டிச்சேர்த்து ஒன்றாக நின்றிருக்க வேண்டிய கட்சிகள் தனித்தனியே நிற்பதாலும்; எக்கட்சியை ஆதரிப்பது என்பதும், எந்த நபருக்கு வாக்களிப்பது என்பதும் வடகிழக்குத் தமிழ் மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தப்போவது உண்மை. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் பெற்ற பெரும் வெற்றிகளைப்போல் நடைபெறப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அமையாது இருப்பதற்கான ஏதுநிலைகள் உருவாகியிருக்கும். ஏனெனில் வட்டாரத் தேர்தல் முறைமை என்பதால் இந்நிலை ஏற்பட அதிக வாய்ப்புண்டு.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சாராத ஏனைய தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு கூட்டுக்களாகப் பிரிந்து நிற்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலகுவாக முன்னிலை அடையவும் வாய்ப்புண்டு. எதிர்பார்க்கப்படும் பெரும் வெற்றி கிடைக்காது போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை ஒருதடவை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்க, சீர் செய்ய இத்தேர்தல் வழிசெய்யும்.

என நம்பலாம். மாறாக மிகப்பெரும் வெற்றி பெற்றால் இத்தேர்தலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண, நாடாளுமன்ற இருக்கைகளுக்கான அத்திவாரமாகிவிடும். எது எப்படியிருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத தமிழ்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து தமது மாற்றணிப் பலத்தை தமிழ் மக்கள் மத்தியில் நிரூபிக்கத் தவறிவிட்டன என்பதையும் இங்கு சொல்லியே ஆகவேண்டும்!

### அரசியலை விரும்பாதிருந்தால் நம்மை விரும்பாதவர்கள் ஆள்வார்கள்!

இப்பின்னணியில் 'வாக்களிக்காது இருந்துவிடுவோம்' எனப் பலர் நினைக்கலாம். அப்படிச் செய்வதால் தகுதியற்றவர்கள் தலைவர்களாக ஆகுவதற்கு வழியாகிவிடும் என்பதால் மக்கள் தங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது மிகமிக அவசியமானதும், இன்றியமையாததும் ஆகும். இதனைத்தான் அறிஞர் பிளேற்றோ கூறுகையில், 'அரசியலில் பங்கேற்க நாம் விரும்பாது இருந்துவிட்டால் நம்மை விரும்பாதவர்கள் நம்மை ஆளவேண்டிய நிலை ஆகிவிடும்!' என்கிறார். ஆகவே, வாக்களிப்பது ஒன்றே வாக்காளர்களின் தெரிவாகும் என்பதை மக்கள் கட்டாயமாக மனங்கொள்ள வேண்டும்.

### எவ்வாறு தெரிவு செய்வது!

தலைவனாக இருக்க விரும்புகின்றவன் தொண்டனாக வேண்டும்! முதல்வனாக இருக்க விரும்புகின்றவன் பணியாளனாக வேண்டும்! இவற்றைத் தமது விருதுவாக்காக அரசியல் தலைவர்கள் கொள்வார்களேயானால் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' யாகப் பரிணமித்துவிடும். எனவே, "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்ற இயேசுவின் வார்த்தைகளை அடிநாதமாகக் கொண்டிருப்பவர்களுக்குத் தங்கள் வாக்குகளைச் செலுத்துவதே வாக்காளர்களின் உண்மைத் தெரிவாக, முதல் தெரிவாக இருக்கவேண்டும். 'போரினாலும் பொய்களினாலும் 2017ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு விட்டது!' என புத்தாண்டு தினத்தன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலையோடு கடந்த ஆண்டை நினைவுபடுத்தி இருக்கின்றார். இனிமேலும் பகைமைகளையும் குரோதங்களையும் ஏற்படுத்த நினைப்பவர்களையும், கவிஞர் மாலினியின் 'நிழலும் நிஜமும்' என்ற கவிதை நூலில் கூறுவதுபோல, "பாலைவனத்தில் பயிரிட்டு விளைச்சல் அள்ளித் தருவோம், கடலே இல்லாத ஊருக்குக் கப்பல் கட்டித் தருவோம்" எனச் சாத்தியமற்ற, சம்மந்தமே இல்லாத பொய்களையும், புரளிகளையும், புழுகுகளையும் உறுதிமொழிகளாகத் தேர்தல் பரப்புரைகளில் தெரிவிப்பவர்களையும் அரசியலில் இருந்து அப்புறப்படுத்துவது மிகமிக அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

வாடிக்கையாளர்களையும், வேடிக்கையானவர்களையும் விட்டுவிட்டு மேற்கூறப்பட்ட நற்செய்தி விழுமியத்தை மனதில் இருத்திக்கொண்டு வாக்காளர் சிட்டையில் புள்ளடி இடுவதுதான் 'தகுதியும் நீதியுமானது!' இதனை, வாக்காளர் பெருமக்கள் செய்வார்களா? புள்ளடி இடும் வரைதான் மக்கள் 'பெருமக்கள்!', இட்டபின் 'பெருமன்னர்கள்' 'பெருமக்களை' கவனித்துக்கொண்டால் நலன் பயக்கும், நன்மை கிடைக்கும் அடுத்தடுத்த தேர்தல்களிலும்!

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 09 1942 — உதிர்வு 08 02 2016

### திரு. S. ஈசாக் (இராசசிங்கம்)
(ஓய்வுபெற்ற லிகிதர், கமநல சேவை நிலையம்)
(பறப்பாங்கண்டல், பெரியகுளம்)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா. 115:6)**

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்,
நாம் கொண்ட பாசம் இன்னும் நலியவில்லையே தந்தையே
நாளாந்தம் செபிக்கின்றோம் நல்லடியார் உங்களுக்காய்
நாதன் இயேசுவின் பாதத்தில் வீற்றிருக்க!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 06 1963 — உதிர்வு 04 02 1987

### திரு. பேதுரு அன்ரன் சேவியர்
(முருங்கன் கமம், முருங்கன்)

**"ஆண்டவன் இல்லத்தில் நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"**

அன்பெனும் மூன்றெழுத்தில் உம் பண்பைக் கண்டோம்.
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
நீர் வாழ்ந்த நாட்களை எம்மால் மறக்க முடியாதையா!
உள்ளத்தாலும் உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கின்றீர்.
கண்ணில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.
இறைவனின் அமைதியில் என்றும் இளைப்பாற
இனிதாய் இறைவனை வேண்டுகின்றோம்!

**பிரிவால் நினைந்துருகும்;** தந்தை பேதுரு (பீற்றர்) சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## வங்காலையில் மேரி பஸ்ரியன் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். ஜெயபாலன் அவர்கள் பஸ்ரியன் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் ஆலய வளாகத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பஸ்ரியன் அடிகளாரோடு படுகொலை செய்யப்பட்ட வங்காலையைச் சேர்ந்த மற்றும் பத்துப்பேரும் இந்த நாளில் நினைவுகூரப்பட்டனர்.

இந்நிகழ்வுகள் அனைத்தையும் வங்காலைப் பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளார் மற்றும் உதவிப்பங்குத்தந்தை பி. றொசான் அடிகளார் ஆகியோர் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

மேரி பஸ்ரியன் அடிகளார் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி இரவு வங்காலை பங்குமனையில் வைத்து இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதற்கு கண்கண்ட சாட்சியங்கள் இருந்தபோதும் இலங்கை அரசாங்கம் இதை முற்றாக மறுத்ததுடன் அடிகளார் இந்தியாவுக்குத் தப்பி ஓடிவிட்டார் என அன்றைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி கூறியிருந்தார். பல்லாண்டுகள் கடந்த நிலையிலும் இந்தத் துயரமான சம்பவத்திற்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. செபமாலை மரியாம்பிள்ளை**

**(ஓய்வுபெற்ற அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் (முருங்கன்)**

**மலர்வு : 12 - 12 - 1941**
**உதிர்வு : 09 - 02 - 2017**

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ எனக்கே சொந்தம்." (எசாயா. 43:1)

வாழ்ந்த காலமெல்லாம் வாழவைத்த தெய்வமே!
வானுலகு சென்றும் ஆசி வழங்கும் வள்ளலே!
எவ்வளவு துன்பம் வந்தாலும் எதையும்
பொருட்படுத்தாது, பொறுப்பெடுத்த கடமைகளைச்
செவ்வனே ஆற்றி சிறப்புடனே சென்றீர்கள் பப்பா!
உங்கள் அன்பைத் தோற்கடிக்கும் மற்றொரு
அன்பை உலகில் யாரும் தரப்போவது இல்லை.
'பப்பா' என்று சொல்ல இனி யாரும் இல்லை!
இறைவன் யேசுவே இறப்பைக் கடந்தவர்.
அவரில் நிலைப்பவர் இறந்தும் வாழ்கிறார்கள்.
எங்கள் மனதில் பப்பா நீங்கள் என்றும்
நிலைத்திருப்பீர்கள்! மண்ணில் இருக்கும்வரை
மறக்கமாட்டோம் உங்களை!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புள்ள மனைவி, மகள், மகன்மார், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.
**"ஆவே மரியா",**
**சூரியகட்டைக்காடு, நானாட்டான்.**




மன்னார் மறைாவட்ட ஆயர் மேதகு பிடேலிஸ் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த ஜனவரி 6ஆம் திகதி தனது 45வது குருத்துவ நாளை நினைவுகூர்ந்தார். 1973ஆம் ஆண்டு ஆயர் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டிருந்தார். மன்னார் மறைாவடட இறைமக்கள் சார்பாக நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
01
1935



உதிர்வு
30
01
2008

**செபமாலை சந்தியோகு**
**(பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்)**

**"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா. 115:6)**

நல்லதொரு குடும்பத் தலைவனாய்
நாளும் வாழ்ந்து காட்டியவரே!
பாசம், கண்டிப்பு இவைகளில் உயர்ந்தவரே
நேசக்கரம் நீட்டி பல உதவிகள் புரிந்தவரே
உடல் வருத்தம் பாராத
உண்மை உழைப்பின் உதாரணமே.
உயரத்தில் நீங்கள் இருந்தாலும்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவில் நாங்கள்.

**பிரிவால் நினைந்துருகும் :**
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04
11
1998



உதிர்வு
30
01
2017

**செல்வி. பா. கிறிஸ்ரீனா (லக்சி)**
**(நொச்சிக்குளம், உயிலங்குளம்)**

நாட்கள் ஒரு வருடம் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லையம்மா உன் பிரிவின் துயரம்!
உனது நேச உறவுகளைத் தவிக்கவிட்டு
எங்கே சென்றாயம்மா லக்ஷிக்குட்டி?

சிதைந்து போனோமே அம்மா உன் மரணத் துயரத்தினால்
மறைந்துபோனதே எங்கள் சந்தோஷமெல்லாம்.
இமயமாவாய் என்றிருந்தோம்.
கண் இமைக்கும் பொழுதில் காணாமல் போனாயம்மா.
உன் திறமைகளையெல்லாம் எனி எப்போ பார்ப்போம்?
உன் புன்சிரிப்பு... அன்பான பேச்சு.. உன் குறும்புத்தனம்...
உன் அழகு வதனம்... உயிர் உள்ளவரை மறவோமம்மா!

**பிரிவால் நினைந்துருகும் :** அன்பு அம்மா, அம்மையா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தாமார், சித்திமார், தங்கைமார், தம்பிமார்.

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
11
1948



உதிர்வு
12
12
2017

**திருமதி. செபஸ்தியாம்பிள்ளை அனுசியா தேவி**
**(க/ வண்ணாகுளம், ஆண்டாங்குளம்)**

இறைக்கே உறவாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் அம்மா!
ஐவரைக் கருவில் தாங்கி
பெயர் சூட்டி, தாலாட்டி, சோறூட்டி
முடிசூடப் போராடிய அரசி இவள்!
படிப்பு எனும் படியில் ஏற்றி
மதிப்பு எனும் மகுடத்தை அடைய வைத்தவள்!
கொடிய நோயின் பிடியில் துவண்டு கிடந்தபோதும்,
இறையன்பில் நிலைத்திருந்த உன்னத தாய் அவள்!
இன்று இவ்வுலகைவிட்டுப் பிரிந்தாலும் - எம்
உள்ளங்களில் வாழுகின்றாள் தெய்வமாக!

**பிரிவால் நினைந்துருகும் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.**

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. இந்திரா அல்பிறட்**

**திரு. அல்பிறட் வியஜரட்ணம்**

**(பாலைக்குழி, அடம்பன், மன்னார்.)**

மலர்வு :- 26.05.1950
உதிர்வு :- 01.02.2006

மலர்வு :- 10.07.1943
உதிர்வு :- 02.01.2006

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், பாசமாய், நேசமாய் அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த அம்மா, அப்பாவே!
உங்கள் ஆன்மா சாந்திபெற உளமாற வேண்டுகின்றோம்.

***உங்கள் பிரிவால் துயருறும் :-***
***பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
06
05
1943



உதிர்வு
24
12
2017

**திரு. அந்தோனி அருளப்பு**
**(பொன்தீவுகண்டல், முருங்கன்)**

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"**

பாசத்தின் இருப்பிடமே எங்கள் அப்பா......!
பரமன் பதம் அமர்ந்திடவோ பரலோகம் விரைந்திட்டீர்.
கவலையில் வாடும் எமக்கு கண்ணீர்தான் கதியாமோ?
கண் கலங்காமல் நீர் எமைக் காத்தீர்
காலமெல்லாம் உமை நினைப்போம் என்றும் நாம் மறவோம்

எங்கள் பிரிவின் துயரம் என்றைக்கும் ஆறாது!
உங்கள் ஆன்மா இறைவனில் இன்புற்றிட
உளமாற நாமும் மன்றாடி நிற்கின்றோம்!

**பிரிவால் நினைந்துருகும் :**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
02
1924



உதிர்வு
04
01
2001

**திரு. தொம்மை சவிரிமுத்து**
**(ஆவணம், நானாட்டான்)**

அன்பிலே அன்னை நீங்கள் பண்பிற்கு பாலம் நீங்கள்
இரக்கத்தின் இலக்கணம், ஈடுசெய்ய முடியாத் தந்தை!

வெள்ளை உள்ளம் கொண்டு நாளும்
நன்றாய் வளர்த்தீர் பிள்ளைகளை
உம் சந்ததி ஓங்க துன்பம் பல பட்டீர்
பலன்தரு மரங்கள்தமை இன்றே நாட்டீர்
ஆன்மீக வழிசெல்ல அத்திவாரம் இட்டீர்
இன்னும் வாழ்கிறீர் எம்மன வீட்டில்
என்றும் உமதான்மா இறை உறவில் வாழ்ந்திட
மன்றாடி வேண்டுகின்றோம் உம் பிள்ளைகள் நாம்!

**பிரிவால் நினைந்துருகும் :** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்